பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 12 வியாழக்கிழமை 25.02.2021 கதிர் 112

இது ரகசியம் அல்ல!

இலங்கை அரசையும் ஈழத் தமிழர்களையும் பொறுத்தவரை ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலின் நேற்றைய, இன்றைய அமர்வுகள் மிக முக்கியமானவையாகும். இலங்கை விவகாரம் தொடர்பில் நாடுகள் தங்களுக்குள் கருத்துக் பக்கம்02 »

## நீதியை நிலைநாட்டும் எண்ணம் இலங்கைக்கு இல்லவேயில்லை!

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம்




நீதியை பின் தொடர்வதற்கான நோக்கம் இலங்கை அரசாங்கத்திற்கு உள்ளது என்பதை எவராலும் நம்ப முடியாது என மனித உரிமைகள் கண் ☞2

## பொறுப்புக் கூறலை நிலைநிறுத்த மாற்று வழிகளையும் தேட நேரும்!

### அமெரிக்க தூதுவர் யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்ரவரி 25

இலங்கையின் யுத்தத்தில் இறுதிக் கட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள், காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவினர்கள் தமக்கு நீதிவேண்டி பன்னிரண்டு நீண்ட ஆண்டுகள் காத்திருக்கின்றனர். நிலைமை இப்படியே நீடிக்க முடியாது. இறைமையுள்ள இலங்கை நாட்டின் நேரடிப்பங்களிப்போடு, சர்வதேச நீதிமுறை நியமங்களுக்கு அமைய விசாரணைகள் நடத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலை நாட்டப்பட வேண்டும். அதைச் செய்ய முடியாத நிலைமை ஏற்படுமெனில் மாற்று மார்க்கம் ☞2



## மைத்திரிக்கு எதிராக விசாரணை; அவசரமாகக் கூடி சு.க. ஆராய்வு

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு, கட்சின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று மாலை கூடியது. இதன்போது முக்கிய விடயங்கள் ☞2

# ஜெனிவாப் பிரேரணை வரைவின் வெற்றி வாய்ப்பு இன்று தெரியும்!

## நாற்பது அங்கத்துவ நாடுகளின் கருத்து பிற்பகலில் வெளியாகும்

ஜெனிவா, பெப்ரவரி. 25

இலங்கை விடயத்தை ஒட்டி ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை வரைவின் வெற்றி வாய்ப்புக்கான பொது கணிப்பீட்டு நிலைமை பெரும்பாலும் இன்று நண்பகலுக்குப் பின்னர் தெளிவாகும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

மொத்தமுள்ள 47 அங்கத்துவ நாடுகளில் நாற்பது நாடுகள் இலங்கை சம்பந்தமான பிரேரணை வரைவு தொடர்பில் தமது நிலைப்பாட்டை இன்று ஜெனிவா நேரம் காலை 10 மணிக்கு (இலங்கை நேரம் பிற்பகல் 2 மணி அளவில்) வரிசையாக வெளிப்படுத்தவுள்ளன. ☞2

## முஸ்லிம்களை விட இம்ரானுக்கு சீன நலனில்தான் அதிக கரிசனை

### மனோ கணேசன் எம்.பி. விசனம்

பட்டுப்பாதை என்ற சீன - பாகிஸ்தான் தாழ்வார திட்டத்தில் இலங்கையையும் இணையு மாறு, சீன நலன்சார் அழைப்பை எடுத்துக்கொண்டுதான் இம்ரான் இலங்கை வந்துள்ளார். ☞2

## நாடாளுமன்றில் நேற்று அமளி சபை இன்று வரை ஒத்திவைப்பு

வெளிநாட்டிலுள்ள இலங்கைப் பிரஜைகள் குறித்த பிரச்சினைகளை சபையில் முன்வைக்க முயற்சித்த எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் ஆளுங்கட்சிக்கும் இடையே ☞2

## இம்ரான் கானுடன் முஸ்லிம் தலைவர் நேற்றுச் சந்திப்பு!

இலங்கை வந்த பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் நேற்று நாடு திரும்ப முன்னர் ரவூப் ஹக்கீம் உட்பட முஸ்லிம் அரசியல்வாதிகளை கடைசி நேரத்தில் சந்தித்தார்.

முன்னதாக ஹக்கீம் போன்றோருடனான சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப் பட்டிருந்தமை தெரிந்ததே.

பாக். பிரதமர் ☞11

## யாழ்.பல்கலை பட்டமளிப்பு




யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமானது.
(மேலும் படங்கள் 12ஆம் பக்கத்தில்)

## சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரானார் சாலிய பீரிஸ்

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 26 ஆவது தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2021 ஆம் ஆண்டிற்கான இலங்கை சட்டத்தரணிகள் ☞2



## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் உயிரிழந்த மாதுவுக்கு தொற்று

கைதடிப் பகுதியில் இருந்து சுகவீனம் காரணமாக சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட வயோதிப மாதுவுக்கு கொரோனாத் தொற்று இருந்தமை நேற்றுமுன்தினம் அவரது மரணத்தின் பின்னர் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த வயோதிபமாது அனுமதிக்கப்பட்டிருந்த ☞2

## யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நான்கு கைதிகளுக்குத் தொற்று

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்னெடுக்கப்பட்ட 431பேரின் பி.சி.ஆர். பரிசோதனையில் 7 பேருக்கு கோரோனா தொற்று உள்ளமை ☞11

## ஒரே நாளில் பன்னிருவர் வீதி விபத்துகளில் சாவு!

வீதி விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக பொலிஸ் ஊடக ☞11

## பாகிஸ்தானின் ஆதரவு இலங்கைக்கு உறுதி!

### கோட்டாவிடம் இம்ரான் தெரிவிப்பு



எதிர்காலத்தில் இலங்கைக்கு பாகிஸ்தான் உறுதியான ஆதரவை வழங்கும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனான சந்திப்பின்போது பாகிஸ்தான் பிரதமர் ☞2

## கொரோனா பலி-457

கொழும்பு, பெப்.25

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 04 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 457 ஆக அதிகரித்துள்ளது.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

களை சுருக்கமாகவும் இறுக்கமாகவும் பரிமாறிக் கொள்ளும் அமர்வு நேற்றும் இன்றும்.

இப்பத்தியை நேற்றிரவு நான் எழுத ஆரம்பித்த சமயம் – இலங்கை நேரப்படி இரவு 8 மணியளவில் – இந்த அமர்வு ஆரம்பித்திருக்கின்றது. சுமார் மூன்று மணி நேரம் அது நீடிக்கும் என அது எதிர்பார்க்கப்பட்டது. ஜெனிவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளில் நாற்பது நாடுகள் கருத்து வெளியிட பெயர் சமர்ப்பித்திருந்தன. ஒவ்வொரு நாட்டுப் பிரதிநிதிக்கும் சுமார் ஒன்றரை, இரண்டு நிமிடங்கள் என நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது.

ஜெனிவாவில் இலங்கையை மாட்டும் விதத்தில் காட்டமான பிரேரணை கொண்டு வரப்பட வேண்டும் என்பது தமிழர் தரப்பின் கண்மூடித்தனமான கோரிக்கை. ஆனால் அவர்கள் பக்கத்தில் அதில் நியாயம் உண்டு.

எனினும், பிரேரணையைச் சமர்ப்பிக்கும் பிரதான நாடுகளுக்கு – பிரிட்டன், கனடா, ஜேர்மன், வடக்கு மாஸிடோனியா, மொன்றிநிக்காரோ போன்ற தேசங்களுக்கு – வேறு பிரச்சினை. 47 உறுப்பு நாடுகளில் குறைந்த பட்சம் 24 நாடுகளின் ஆதரவைத் திரட்ட வேண்டும். அதை உறுதி செய்து கொண்டுதான் பிரேரணையைக் களத்தில் இறக்க வேண்டும். தமிழர் விருப்பத்தை நிறைவு செய்கின்றோம் அல்லது நீதியானதை முன்வைக்கின்றோம் என்று பீற்றிக் கொண்டு காட்டமான ஒரு பிரேரணையை முன்வைக்க, அது தோற்கடிக்கப்பட்டால் பிறகு இலங்கையைக் கட்டுக்குள் கொண்டு வர முடியாத நிலைமை ஏற்பட்டு விடும். பிரேரணையை சமர்ப்பித்த நாடுகளுக்கும் அது பெரும் பின்னடைவாகி விடும். இவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டுதான் நாசுக்கான வாசகங்களில் பிரேரணை வடிவத்தை அமைக்க வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளிலும் கூட மனித உரிமை மீறல் பிரச்சினைகள் இருக்கின்றன. உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் உள்ளன. ஆகவே, இலங்கை விடயத்தில் கண்மூடித்தனமாக அவை இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவைத் தரப்போவதில்லை.

மிக மோசமான – காட்டமான – வாசகங்கள் அடங்கிய ஒரு பிரேரணை தீர்மானமாக அங்கீகரிக்கப்படுமானால், நாளை தங்கள் நாட்டுக்கு எதிராகவும் அத்தகைய தீர்மானம் ஒன்று அங்கீகரிக்கப்படுவதற்கான முன்னுதாரணமாக அது மாறிவிடும் என்ற அச்சம் அந்நாடுகளுக்கு உண்டு. எனவே பிரேரணை வாசகங்களின் அடிப்படையில் அதை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா அல்லது நடுநிலை வகிப்பதா என்ற முடிவை நாடுகள் எடுக்கும் என்று கூறப்படுகின்றது.

ஏற்கனவே பிரேரணையின் நகல் வடிவம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. அவ்வப்போது நாடுகளின் விருப்பங்கள், எதிர்பார்ப்புகளுக்கு அமைய பிரேரணை வாசகங்களில் ஒரு சில சொல்லாடல்கள், வாசகங்கள், மாற்றப்படலாம். ஆனாலும் பெரும்பாலும் இப்படித்தான் பிரேரணை அமையும் என்பதைக் காட்டும் வரைவு – நகல் – வெளியாகிவிட்டது.

அதனை ஒட்டியே அங்கத்துவ நாடுகள் 47 இல் மொத்தம் 40 நாடுகள் நேற்றிரவும் இன்று பகலும் சுருக்கக் கூற்றின் மூலம் தமது கருத்து நிலைப்பாட்டை வெளிப்படுத்தத் தயாராகியுள்ளன. அவை ஒவ்வொன்றும் பிரதிபலிக்கும் கருத்தை வைத்து, இந்தப் பிரேரணையை அவை ஆதரிக்கின்றனவா, அல்லது எதிர்க்கின்றனவா அல்லது நடுநிலை வகிக்கப் போகின்றனவா என்பதை உறுதி செய்ய முடியும். இந்தியப் பிரதிநிதியும் கூட இன்று பேசவிருக்கின்றார்.

இன்று மாலை நமது மாலை இதழ் வெளியாகும்போது, இலங்கைக்கு எதிராக பிரிட்டன், கனடா, ஜேர்மன் உள்ளிட்ட நாடுகள் சமர்ப்பித்துள்ள பிரேரணையை எத்தனை நாடுகள் ஆதரிப்பது உறுதி என்பது ஓரளவுக்குத் தெளிவாகியிருக்கும் என்று நம்பியிருக்கலாம்.

– மின்னல் –

## பொறுப்புக் கூறலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

குறித்தும் ஆராய நேரிடும். அவை குறித்துத்தான் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இப்போது ஆராயப்படுகின் றது.

– இவ்வாறு இன்று யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்திருக்கின்றார் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா பி.ரெப்லிட்ஸ் அம்மையார்.

யாழ். ஊடகங்களில் பிரதிநிதிகளை இன்று காலை தனியார் விடுதி ஒன்றில் அவர் சந்தித்தார். அப்போது கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை ஓர் இறைமையுள்ள நாடு. அதன் உள் விடயங்களில் தலையிடுவதோ இலங்கையை தொல்லைப்படுத்துவதோ அமெரிக்காவின் நோக்கம் அல்ல. ஆனாலும் உலகம் முழுவதும் மனித உரிமைகள் பேணப்படுவதிலும், அவை மீறப்பட்டமையால் பாதிக்கப்பட்டோருக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதிலும் அதிக கரிசனை காட்டி வரும் நாடு அமெரிக்கா. அதனால்தான் இந்த விடயத்தில் நாம் அதிக ஈடுபாடுகாட்டி வருகின்றோம். தொடர்ந்தும் காட்டுவோம்.

யுத்த காலத்தில் யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித மாண்புகளுக்கு எதிரான கொடூரங்களினால் பாதிக்கப்பட்டோர் கடந்த பன்னிரண்டு ஆண்டுகள் நீதி வேண்டி பரிதவிப்போடு காத்து நிற்கின்றார்கள்.

இலங்கை இறைமையுள்ள, ஜனநாயக நாடு. தனது மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்கள் தொடர்பில் சர்வதேச நீதி விசாரணை முறை நியமங்களுக்கு அமைவாகத் தமது மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் முதல் கடமையும் பொறுப்பும் இலங்கையைச் சார்ந்தது.

அவர்கள் பன்னிரண்டு ஆண்டுகளாக காத்திருக்கின்றார்கள். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைக்கூட அறியாது பன்னிரண்டு ஆண்டுகளாகத் தவிக்கின்றார்கள். அத்தகையோரின் மன நிலை எத்தகையது என்பது புரிகின்றது.

நிலைமை இப்படி நீடித்துச் செல்ல முடியாது. இனியும் நீதி தாமதிக்கப்பட முடியாது.

மனித உரிமைகள் நிலைநாட்டப்படுவதை உறுதி செய்யும் கடப்பாடு அமெரிக்கா உட்பட ஒவ்வொரு நாட்டுக்கும் உள்ளது.

அதனால், இழைக்கப்பட்ட அத்துமீறல்களுக்கு சர்வதேச நியமங்களுக்கு அமைவாக விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக்கூறலை நிலைநாட்டி, இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமையை உறுதிப்படுத்தும் வகையிலான தீர்வுகளை கண்டறிய வழிசெய்யப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றோம். அதுவே, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் இப்போது முழு அளவில் முயற்சியாக முன்னெடுக்கப்படுகின்றது.

இறைமையுள்ள, ஜனநாயக நாடு என்ற வகையில் – மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசையும், சட்டத்தின் ஆட்சியையும் கொண்ட நாடு என்ற முறையில் மனித உரிமைகளை நிலைநாட்டும் இந்த விடயத்தில் ஆக்கபூர்வமான பிரதிபலிப்புக்களைக்காட்டி தனது கடப்பாட்டை நிறைவு செய்ய வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்கு உண்டு. அதையே நாம் வலியுறுத்தி நிற்கின்றோம். ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலும் அதையே செய்கின்றது.

பொறுப்புக் கூறலை நிலைநாட்டுவதற்கான தனது பொறுப்பை உரிய தரப்புகள் உதாசீனம் செய்தால் மாற்று வழிகளை சர்வதேச சமூகம் தேட நிர்ப்பந்திக்கப்படும். அந்தக் கட்டாயம் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கும் ஏற்படும்.

சர்வதேசங்களிலும் மனித உரிமைகளை நிலை நிறுத்தும் பொறுப்பில் காத்திரமாகவும் ஈடுபாட்டுடனும் பங்களிக்க ஜோ பைடனின் அமெரிக்க அரசு விரும்புகின்றது. அதனால் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிலும் அமெரிக்கா அதிக பங்களிப்பை எதிர்காலத்தில் வழங்குவதற்கு முன்நிற்கும். – இவ்வாறு அமெரிக்கத் தூதுவர் மேலும் தெரிவித்தார்.

## மைத்திரிக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

குறித்து கலந்துரையாடப்பட்டது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழு அத்தாக்குதல் தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டை முன்வைக்குமாறு பரிந்துரைத்துள்ளது.

இதை அடுத்தே சு.க. மத்திய செயற்குழு நேற்று அவசரமாகக் கூடியது.

## ஜெனிவாப் பிரேரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒன்றரை நிமிடம் முதல் 2 நிமிடங்கள் வரை நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தக் காலகட்டத்தில் அவை தமது நிலைப்பாட்டை ஓரளவு கோடி காட்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை தொடர்பாக விவாதம் நேற்று மாலையே ஜெனிவா, மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஆரம்பமானது. முதலில் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை நிலைமை தொடர்பான தமது பரிந்துரையை நிகழ்த்தினார். அதற்குப் பின்னர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா மெய்நிகர் முறையில் உறுப்புநாடுகளுக்கு தமது கருத்தை வரிசைப்படுத்தி உரையாற்றினார்.

இருவரினதும் உரைகளை அடுத்து, நேரம் பற்றாக்குறையினால், விடயம் இன்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நாற்பது நாடுகளினதும் பிரதிநிதிகள் வெளியிடும் கருத்துகளில் இருந்து, இலங்கைக்கு எதிரான பிரேரணை மீதான பொதுக் கருத்து நிலைப்பாட்டைக் கணிப்பிட முடியும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று மாலைக்குள் அந்த விவரம் வெளியாகும் என நிபுணர்கள் நம்புகின்றனர்.

## முஸ்லிம்களை விட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்களின் நலனை விட சீன நலனில்தான் அவருக்கு அக்கறை இருந்ததாக தெரிகிறது.

– இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கின்றார் மனோ கணேசன் எம்.பி.

## பாகிஸ்தானின் ஆதரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இம்ரான் கான் உறுதியளித்துள்ளார்.

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது பாகிஸ்தானிற்கு விஜயம் மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதிக்கு இம்ரான் கான் அழைப்பு விடுத்தார்.

இருதரப்பு வர்த்தகம், முதலீடுகள் மற்றும் வணிக ஒத்துழைப்பு உட்பட வலுவான பொருளாதார கூட்டாட்சியை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை பிரதமர் இம்ரான் கான் இதன்போது சுட்டிக்காட்டினார்.

விவசாயம், சுற்றுலா, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், விளையாட்டு, கல்வி மற்றும் கலாசாரம் போன்ற பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு குறித்தும் இதன்போது பேசப்பட்டுள்ளது.

மேலும் இந்தச் சந்திப்பின் பின்னர் தூதுக்குழு அளவிலான பேச்சுகள் நடைபெற்றன என கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்தது.

## சட்டத்தரணிகள் சங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சங்கத்தின் தேர்தல் நேற்று நடந்தது.

தலைவர் பதவிக்கு ஜனாதிபதி சட்டத்தரணிகளான குவேர டி சொய்சா மற்றும் சாலிய பீரிஸ் போட்டியிட்டனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸிற்கு 5,162 வாக்குகளும் ஜனாதிபதி சட்டத்தரணி குவேர டி சொய்சாவிற்கு 2,807 வாக்குகளும் கிடைத்தன

2,355 மேலதிக வாக்குகளால் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## நீதியை நிலைநாட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

காணிப்பகத்தின் ஜெனிவாவிற்கான பணிப்பாளர் ஜோன் பிர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் உரையாற்றியிருந்தார்.

இதில் சர்வதேசக் குற்றங்களை மறுப்பதாகவும் பொறுப்புக்கூறலை நிராகரிப்பதாகவும் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையை திட்டமிட்ட பிரசாரம் என கூறி நிராகரிப்பதாகவும் அவர் தெரிவித்தார் என ஜோன் பிர் கோடிட்டு காட்டியுள்ளார்.

இதைக்கேட்ட பின்னர், நீதியை பின் தொடர்வதற்கான நோக்கம் இலங்கை அரசாங்கத்திற்கு உள்ளது என்பதை எவராலும் நம்ப முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, சர்வதேச பொறுப்புக்கூறல் தற்போது அவசியமாகியுள்ளது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஜெனிவாவிற்கான பணிப்பாளர் ஜோன் பிர் வலியுறுத்தியுள்ளார்.

## நாடாளுமன்றில் நேற்று..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாடாளுமன்றத்தில் நேற்று கடும் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டன.

இதன் காரணமாக நாடாளுமன்றத்தில் பெரும் அமளி உருவானது. சபை அமர்வுகளை சபாநாயகர் இன்று வரை வரை ஒத்திவைத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மொழி மூல விடைக்கான கேள்வி நேரத்தின் பின்னர் சபையில் எழுந்த எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, வெளிநாடுகளிலுள்ள இலங்கை நாட்டவர்கள் பற்றிய பிரச்சினையொன்றை முன்வைக்கத் தொடங்கினார்.

வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கைப் பிரஜைகளை இலவசமாக நாட்டிற்கு வரவழைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதது ஏன் என அவர் கேள்வி எழுப்பினார்.

எனினும் நாடாளுமன்ற விதிமுறைகளை மீறி எதிர்க்கட்சித் தலைவர் செயற்படுகிறார் என ஆளும் தரப்பினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதன் போதே சபையில் அமளி ஏற்பட்டு சபை நாளை வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் சஜித் கருத்துத் தெரிவிக்கையில் –

நாற்பதாயிரத்திற்கும் அதிகமான இலங்கைத் தொழிலாளர்கள் வெளிநாடுகளில் அநாதரவாகியுள்ளனர். அவர்களை நாட்டிற்கு மீண்டும் வரவழைப்பதில் அதிகளவில் பணம் அறவிடப்படுகின்றது. விமானச் சீட்டுக்கும் தனிமைப்படுத்துவதாகக் கூறி ஹோட்டல்களுக்கும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்குமென அவர்களிடமிருந்தே பணம் அறவிடப்படுகின்றது.

இப்போது வரையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்களத்தில் ஆயிரத்து நானூறு கோடி ரூபா சேமிப்பில் உள்ளது. இந்த பணத்தை செலவு செய்து எமது மக்களை இலவசமாக நாட்டிற்கு அழைத்துவர ஏன் அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதுள்ளது?

வெளிநாடுகளில் பணிபுரியும் எமது மக்கள் தாம் சேமித்து வைத்துள்ள பணத்தை செலவு செய்து நாட்டிற்கு வரவேண்டியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் எந்தவித நிகழ்ச்சி நிரலிலும் உள்ளடங்காத ஒரு விடயம் குறித்து சபையில் பேசிக்கொண்டிருக்கிறார் எனவும், சபை விதிமுறைகளை மீறி செயற்பட்டு வருகின்றார் எனவும் தெரிவித்து சஜித் பிரேமதாஸவுடன் ஆளும் தரப்பினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

## சாவகச்சேரி ஆஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இரண்டு வாட்டுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. ஓர் இளம் டாக்டர் தம்பதியினரும் அவர்களின் குடும்பத்தினரும் உட்படச் சிலர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

# தொற்றாளர் முன்னர் பயணித்த பஸ் தொடர்ந்து சேவையில் ஈடுபடுவதா?

## விசுவமடுவில் வழிமறித்து ஆர்ப்பாட்டம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,பெப்.25

கொரோனா உறுதி செய்யப்பட்ட ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள் பயணித்த பஸ் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுவதை ஆட்சேபித்து விசுவமடுவில் நேற்று முன்தினம் பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடு றெட்பான பிரதேசத்தில் இருந்து தினமும் பலர் 3 ஆடைத் தொழிற்சாலைகளில் பணிக்காக பயணிப்பது வழமையானது. இவ்வாறு பயணிக்கும் ஆடைத் தொழிற்சாலைகளில் ஒரு தொழிற்சாலைக்கு பணி நிமித்தம் சென்று வருபவர்களில் மூவருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டபோதும் அந்த தொழிற்சாலையின் பஸ் தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டு தமது கிராமத்திற்கு வருவதனால் அச்சமாகவுள்ளதாக தெரிவித்து அப்பகுதி மக்கள் ஆடைத் தொழிற்சாலையின் பஸ்கள் அனைத்தையும் மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிக்கு தகவல் வழங்கி அனைவர் முன்னிலையிலும் குறித்த விடயம் ஆராயப்பட்டது.

இதன்போது றெட்பானவில் இருந்து 3 ஆடைத் தொழிற்சாலைகளுக்குப் பணியாளர்கள் செல்லும்போதும் இரு தொழிற்சாலைகளின் பணியாளர்களில் இதுவரை எவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்படவில்லை. எனவே அந்த இரு தொழிற்சாலை பணியாளர்களை ஏற்றும் பஸ்களும் எந்தத் தடையும் இன்றி பயணிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம் மூன்றாவது தொழிற்சாலையின் பணியாளர்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபடும் பஸ்ஸின் பயனாளர்களில் இருந்தே இதுவரை மூவர் இனம் காணப்பட்டமையால் அந்த பஸ்ஸை செலுத்திய, சாரதி, நடத்துநர் பயணிகள் அனைவரும் பஸ்ஸுடன் தனிமைப்படுத்தலிற்கு உட்பட்டே ஆக வேண்டும், அதனால் அந்த பஸ் மட்டும் சேவையில் ஈடுபட முடியாது எனத் தெரிவித்தமைக்கு அமைய போராட்டம் கைவிடப்பட்டு நிலைமை இயல்பிற்குத் திரும்பியது.

# வவுனியாவில் பல வீதிகள் காப்பெற்றாக மாறுகின்றன!

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக குன்றும் குழியுமாக போக்குவரத்து ஏற்றவகையில் இல்லாமல் பல வீதிகள் வவுனியா மாவட்டத்தில் காணப்பட்டன. இவ்வீதிகளை பயன்படுத்துவதில் மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகியிருந்தனர்.

இதன் காரணமாக தங்களது வீதிகளை புனரமைத்து தருமாறு வவுனியா மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராம மக்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் வடக்கில் முன்னெடுக்கப்படவுள்ள ஒருங்கிணைந்த சாலை திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் 271.48 கிலோமீற்றர் வீதிகளை காப்பெற் வீதிகளாக மாற்றுவதற்கான வேலைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, ஜனாதிபதியின் ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதிகள் காப்பெற் இடும் திட்டம் மூலமாக தற்போது பல கிராமங்களின் உள் வீதிகள் பலவும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

அரசின் இந்தத் திட்டம் காரணமாக நீண்டகாலமாக வவுனியா வாழ் மக்களின் நீண்டகால பிரச்சினை தற்போது தீர்க்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வவுனியாவின் நான்கு பிரதேசசெயலர் பிரிவுகளைவும் உள்ளடக்கிய வகையில் குறித்த வீதிகள் அமைப்பதற்காக 12,947.6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்தினூடாக வவுனியாவில் நீண்ட காலமாக புனரமைக்கபடாமல் குண்டும் குழியுமாக காணப்பட்ட பல்வேறு முக்கிய வீதிகள் காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டு வருகின்றது.

இதன்படி 171.17கிலோமீற்றர் அளவிலான வீதிகளிற்கான ஒப்பந்தம் மாகா பொறியியல் நிறுவனத்திற்கும், 100.31கிலோமீற்றர் வீதிகள் சைனாஸ்ரேற் பொறியியல் நிறுவனத்திடமும் வழங்கப்பட்டுள்ளன.

ஐ - ரோட் திட்டத்தின் கீழ் வடக்கில் 1034.18 கிலோமீற்றர் நீளமான 343 வீதிகள் புனரமைக்கபடவுள்ளதுடன், யாழில் 273.24 கிலோமீற்றரும், கிளிநொச்சியில் 181.78 கிலோமீற்றரும், முல்லைதீவில் 141.34 கிலோமீற்றரும், மன்னாரில் 166.34 கிலோமீற்றர் வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளது. அதற்கான ஒப்பந்த காலம் இரண்டு வருடங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வன்னியில் வைக்கோலைப் பாதுகாப்போம் இரணைமடு விவசாய அமைப்பு அழைப்பு!

ந.லோகதயாளன்.

வன்னியில் இருந்து தினமும் பல சுமை வைக்கோல் யாழ்ப்பாணம் எடுத்துச் செல்லும் நிலையில் வன்னியில் பெரும் தொகையான கால்நடைகளை வைத்திருப்போர் வைக்கோலை பாதுகாக்க முன்வர வேண்டும் என இரணைமடு விவசாயிகள் சம்மேளனச் செயலாளர் மு.சிவமோகன் அழைப்பு விடுத்தார்.

மாரி காலத்தில் மாவட்டத்தின் நிலங்கள் அனைத்தும் விதைப்பிற்கு உட்படுத்தும்போது கால்நடைகளை அதிகளவில் பண்ணையாக வைத்திருப்பவர்கள் கால்நடைத் தீவனத்திற்கு பெரிதும் சிரமத்தை எதிர் நோக்குவது மட்டுமல்ல பல கால்நடைகள் உயிரிழக்கும் அவலமும் இடம் பெறுகின்றது. இருந்தபோதும் அரசு அவர்களுக்கான மேய்ச்சல் தரைகளை ஒதுக்கவில்லை.

இவ்வாறு அரசு அசமந்தமாக இருக்கும் நிலையில் கால் நடை உரிமையாளர்களின் நன்மை கருதி விவசாயிகள் வருடந்தோறும் தமது வயலில் புல் மற்றும் செடிகளை அழிப்பதற்காக வைக்கோலை தீ மூட்டும் செயலை முடிந்தவரை கட்டுப்படுத்தியுள்ளோம்.இருப்பினும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் சில கால் நடைகளை வளர்க்கும் உரிமையாளர்கள் உழவு இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்தி வைக்கோலை எடுத்துச் செல்கின்றனர். இருப்பினும் வன்னியில் பட்டி உரிமையாளர்கள் அந்த முயற்சியில. ஈடுபடவில்லை.

பட்டி உரிமையாளர்களின் அதிக மாடுகளிற்கு போதிய வைக்கோலை கையிருப்பு ஏற்படுத்துவது கடினமாக இருந்தாலும் முடிந்தளவேனும் வைக்கோலை பேண எமது பட்டி உரிமையாளர்களும் முயற்சிப்பதே நல்லது. இதே நேரம் இன்னும் சில நாள்களில் விவசாயிகள் வைக்கோலை முழுமையாக பசளை கருதி தாங்கும் பணியில் ஈடுபடுவர் எனத் தெரிவித்தார்.

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை தாதிய பரிபாலகருக்கு சேவை நயப்பு!

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக தாதியராக, தாதிய பரிபாலகராகக் கடமையாற்றிய சோ.இராசேந்திரன் ஓய்வுபெறுவதை இட்டு, வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தால் நாளை (வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு கேட்போர் கூடத்தில் சேவை நயப்பு விழா நடைபெற உள்ளது.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரும் நோயாளர் நலன்புரிச் சங்கத் தலைவருமாகிய வைத்தியர் டி.ஜி. விமலசேன தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வரவேற்புரையை ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் லயன். ச.சிவானந்தராசா வழங்குவார்.

வாழ்த்துரைகளை வலி.வடக்கு பிரதேச செயலர் சிவஸ்ரீ, வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன், உளநலப் பிரிவு வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி எஸ்.சிவயோகன், முன்னாள் வைத்திய அத்தியட்சகர்களான – ஓய்வுநிலை பிரதிப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.சிவராணி, மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.விநோதன், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் அ.ஜெயக்குமார், முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி மு.உமாசங்கர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் யோ.திவாகர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க செயலாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன் ஆகியோர் வழங்குவர்.

விழா நாயகர் கௌரவிப்பு ஏற்புரையைத் தொடர்ந்து நன்றியுரையை வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் லயன் பா.மரியதாஸ் வழங்குவார்.

# முகக் கவசம் அணியாதவர்களுக்கு காத்தான்குடியில் எச்சரிக்கை விடுப்பு!



மட்டக்களப்பு காத்தான்குடி நகரில் பொலிசஸாரின் விசேட சோதனை நடவடிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை மாலையில் இடம்பெற்றது இதன்போது வீதிகளில் முகக்கவசம் அணியாது பயணித்த சுமார் 50 இற்கு மேற்பட்டோரை தடுத்து நிறுத்தி அவர்களுக்கு உபதேசம் வழங்கி எச்சரித்து அங்கிருந்து அனுப்பினர்.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நளனசிறி தலைமையில் பொலிஸ் குழுவினர் இந்த திடீர் விசேட சோதனை நடவடிக்கையை செவ்வாய் மாலை 6 மணிக்கு காத்தான்குடிநகர் சிக்னல் சந்தியில் மேற்கொண்டனர்.

இதன்போது வீதியால் மோட்டர்சைக்கில் ஓட்டோ போன்ற வாகனங்களில் முகக்கவசம் அணியாது பிரயாணித்த சுமார் 50 இற்கும் மேற்பட்டோரை கைதுசெய்து சுமார் அரைமணிநேரம் தடுத்துநிறுத்தினர்.

இதன் பின்னர் பொதுச் சுகாதார அதிகாரி மற்றும் பொலிஸ் நிலைய பெறுப்பதரிகாரி அவர்களுக்கு ஆலோசனை வழங்கி முககவசம் அணியாது பிரயாணித்தால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளை பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும் என எச்சரித்து அவர்களை விடுவித்தனர்.



# தவக்காலச் சிந்தனை

அன்ரனி பீற்றர் அபீர்ராஜன்
ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்

## கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்

"உங்களிடையே குறைவான ஞானம் கொண்டிருப்போர் கடவுளிடத்தில் கேட்கட்டும்; அப்போது அவரும் ஞானத்தைக் கொடுப்பார். (யாக். 1.5) எதையாவது பெற்றுக் கொள்ள வேண்டுமானால் கேட்பது, தேடுதல் முக்கியமானதாகும் என்பது, சாதாரண நடைமுறையாகும். அறிவைப் பெற வேண்டுமானாலும் செவி கொடுத்தல் இன்றியமையாததாகும். எனவேதான் இயேசு சொன்னார், கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்றார்.

மானிட வாழ்விலே பல சத்தங்களை நாம் கேட்டுக் கொண்டே இருக்கின்றோம். அவையாவையுமே எமக்கு பயனுள்ளவைகளாக அமைவதில்லை. தீமையின் வழிக்கு அடிமைப்படுத்தும் விளம்பரங்களே அதிகமாக இருக்கின்றன. இவற்றின் நடுவே இறைவனின் குரல் நன்மைகள் நடுவேயும் நல்லவர்கள் மூலமாகவும் நற்செய்திகளாகவும் கூறப்படுபவற்றுக்கு நாம் செவி சாய்த்தால் எம்முடைய வாழ்வு இறைவனைப் பின்பற்றிய வாழ்வாக அமையும் எம் வாழ்வைக் கொண்டு செலுத்த தேடுதலும் முக்கியமானதாகும். நியாயமான முறையில் அநீதி இல்லாமல் உழைக்கும் உழைப்பு, தேடல் மூலம் நாம் பெற்றுக்கொள்வதே இறைவனுக்கு உகந்ததாகின்றது. மேலதிகமான தேடல்கள் எல்லாம் அடுத்தவர்க்கு உரியதைக் கவர்ந்து கொள்வதாகும். தட்டுவது என்பது புதிய முயற்சிகள் செய்யும்போதே புதிய வழிகள் எமக்குத் திறக்கப்படுகின்றன.

நாம் பின்பற்றும் தவறான வழிகள் எம்மைத் தீமையின் பாதையிலே கொண்டு செல்லும். அனுதினம் எமது செயல்களை மீளாய்வு செய்து பார்ப்போமாக இருந்தால் எமது தவறுகளைத் திருத்திக் கொள்வது சுலபமானதாகும். தீமையின் பாரம் எம்மை அளுத்தும் போது எமது தவறான வழிகளை விட்டு மனம் திரும்புவது கடினமானதாகும். இறைவனுக்கு பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பமாகும். ஞானமுள்ள வாழ்க்கை வாழ இறைவனின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வாழ்வதே விண்ணக வாழ்வை அடைந்து கொள்ள வழிவகுக்கும். தவக்காலம் எமது வாழ்வைச் சீர்தூக்கிப் பார்த்து தீமைகளைக் களைந்து நற்செய்தியின் ஒளியில் வாழ்ந்த தூண்டும் காலமாக இருப்பதால் முயன்று தவறி வீழ்ந்தாலும் மீண்டும் எழுந்து சிலுவையின் வழியில் நடந்திடத் தீர்மானிப்போம்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அமெரிக்கா போடும் படம்!

'இந்த ஊர் இன்னுமா எங்களை நம்புகிறது?'

'வின்னர்' படத்தில் கைப்புள்ளயாகத் தோன்றும் நகைச்சுவை நடிகர் வடிவேல் கேட்கின்ற கேள்வி இது. பலரின் வாயிலும் இரைமீட்கப்படும் வசனம்.

நேற்று யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளரைச் சந்தித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் அம்மையார் இலங்கை தொடர்பில் தெரிவித்த கருத்துக்களை செவிமடுத்த போது இது போன்ற ஒரு கேள்வி எழுந்தது.

*"உலகம் இன்னுமா இலங்கையை நம்புகின்றது?"*

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில், யுத்தப் பிரதேசத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை தொடர்பில் சர்வதேச நீதி விசாரணை நியமங்களுக்கு அமைய நீதி விசாரணைகள் நடத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்பட்டு, இழப்பீடுகள் வழங்கப்பட்டு, மீள நிகழாமை உறுதிப்படுத்தப்படும் விடயத்தில் கொழும்பு அரசு இனிமேலும் நீதி, நியாயமாகச் செயற்படும் என்றும், தனது கடப்பாட்டையும் பொறுப்பையும் அது உரிய முறையில் நிறைவேற்றும் என்றும் தாங்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்று அமெரிக்க தூதர் கூறியபோது இந்தக் கேள்விதான் எழுந்தது.

இலங்கையின் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நடந்தவை என்ன என்பது தொடர்பில் ஏனைய தரப்புகளை விட அதிகம் தெரிந்த தரப்பு அமெரிக்காதான். அதனிடம் அத்தகைய தொழில்நுட்ப வசதி அன்றும் இருந்தது, இன்றும் இருக்கின்றது.

யுத்தப் பிரதேசத்தின் ஒவ்வொரு சதுர அங்குலத்திலும் என்ன நடந்தது என்பதைத் துல்லியமாக அறியும் தகைமை அமெரிக்காவுக்குத்தான் இருந்தது. அத்தகைய செய்மதி வசதிகளையும் தொழில்நுட்ப நுண்ணறிவையும் அது வைத்துள்ளது.

விடுதலைப் புலிகளை இன்று வரை பயங்கரவாதப் பட்டியலில் வைத்திருக்கும் அமெரிக்காவுக்கு புலிகளின் 'பயங்கரவாதச் செயல்களை' பற்றிய விவரங்களை விட, அதனை அழிப்பதற்கு கொழும்பு ஆட்சிப்பீடம் முன்னெடுத்த 'அரச பங்கரவாதத்தின்' நுணுக்கமான விடயங்கள் நன்கு தெரியும், அதற்கான தொழில் நுட்ப ஆதாரங்கள் கூட அமெர்க்கா வசம் தாராளமாக உண்டு.

அந்த 'அரச பயங்கரவாதம்' பற்றிய முழுத் தகவல்களையும் மறைத்து வைத்துக் கொண்டுதான் இலங்கையில் உள்ளது 'இறைமையுள்ள அரசு', 'ஜனநாயக ஆட்சி', 'சட்டத்தின் ஆட்சி முறைமை' என்றெல்லாம் இங்கு வந்து பாடம் எடுத்துப் போதிக்கின்றார் அமெரிக்கத் தூதுவர்.

உலகம் நீதியின் சக்கரத்தில் சுழல்வதில்லை என்பது உண்மைதான்.

ஆனால் புலிகளின் பயங்கரவாதத்தை அழிக்கின்றோம் என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட 'அரச பயங்கரவாதத்துக்கு' துணை போனதுதான் அமெரிக்கா.

இப்போதும் கூட உண்மையை வெளிப்படையாகப் பேசுவதற்கு உலகப் பொலிஸ்காரனான அமெரிக்காவுக்குத் துணிவில்லை.

இலங்கையில் இருக்கும் அரசு ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டது என்பது உண்மைதான். ஆனால் அந்த ஜனநாயக முறைமை யாது, எத்தகையது, அதன் பண்பியல்பு என்ன என்பவை எல்லாம் அமெரிக்காவுக்குப் புரியாததல்ல; இங்கு நிலவுவதாகக் கூறப்படும் சட்டத்தின் ஆட்சி, எத்தகையது என்பதும் அமெரிக்காவுக்குத் தெரியாததல்ல.

தூங்குபவனை எழுப்பலாம், தூங்குபவன் போல நடிப்பவனை எழுப்ப முடியாது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்த கால கொடூரங்களுக்கு நீதி விசாரணை நடத்தி, பொறுப்புக் கூறலை நிலைநாட்டும் விடயத்தில் தூங்குபவன் போல நடிக்கின்றது கொழும்பு. அது நடிப்பு என்று தெரிந்து கொண்டும் அதனை எழுப்புவது போல தானும் சேர்ந்து நடிக்கின்றது அமெரிக்கா.

இரு தரப்புகளும் சேர்ந்து உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களினதும் நீதியினதும் காதில் தொடர்ந்தும் பூச்சுற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஜெனிவா முயற்சி மூலம் நல்லாட்சி அரசின் காலத்தில் ஒரு சில ஆரோக்கியமான விடயங்கள் சொற்ப அளவில் முன்னெடுக்கப்பட்டன. காணாமல் போனோருக்கான ஆணையம் ஸ்தாபித்தமை போன்ற விரல் விட்டு எண்ணக் கூடிய சில நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், பேரினவாதத்தைக் கிளப்பி, அதன் மூலம் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய ராஜபக்ஷக்கள், அத்தகைய ஆரோக்கியமான விடயங்களையே இப்போது ஒவ்வொன்றாகக் கேள்விக்குள்ளாக்கித் தகர்த்து வருகின்றனர்.

இதனையல்லாம் பார்த்துக்கொண்டு இன்னமுமே ராஜபக்ஷகளின் அரசு இறைமையுள்ள அரசு, ஜனநாயக நாடு, இங்கு சட்டத்தின் முழு ஆட்சியே நிலவுகின்றது என்ற கற்பனாவாதத்துடன் காய்களை நகர்த்தி, பாதிக்கப்பட்ட தரப்புகளின் தலையில் ராஜபக்ஷக்களுடன் சேர்ந்து மிளகாய் அரைக்கின்றது அமெரிக்க அரசு.

ராஜபக்ஷக்களின் அரச பயங்கரவாதத்தை வெளிப்படையாக அம்பலப்படுத்தி நீதி செய்யத் திராணியற்ற அமெரிக்க அரசுக்கு, இன்னும் இலங்கையை நம்புவதாகத் தமிழருக்குப் படம் காட்டுவதைத் தவிர வேறுவழியில்லை.

# வர்த்தக முதலீட்டு மாநாட்டில் இலங்கை, பாக். பிரதமர்கள்!



கொழும்பு, பெப். 25

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் கொழும்பில் இடம்பெற்ற வர்த்தக மற்றும் முதலீட்டு மாநாட்டில் பங்கேற்றார்.

இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கில் இடம்பெற்ற இம்மாநாட்டில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் உயர்மட்ட வர்த்தக பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட பாகிஸ்தான் பிரதமர் மற்றும் இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்ற இருதரப்புப் பேச்சில் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் முதலீடுகளை மேம்படுத்துவது தொடர்பாக அதிக கவனம் செலுத்தியிருந்தனர்.

இந்நிலையில், இன்றைய வர்த்தக மற்றும் முதலீட்டு மாநாடு இருநாட்டு முன்னணி வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் அவர்களது எண்ணப்படி எதிர்கால வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளதாக பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் உள்ளிட்ட குழுவினர், நேற்று மாலை விஜயத்தை நிறைவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம்; நான்கு வருட நிறைவையொட்டி நேற்று கவனவீர்ப்பு!

கொழும்பு, பெப்.25

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் நான்கு வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன.

இதனையடுத்து குறித்த உறவுகளால், தொடர் போராட்டம் முன்னெடுக்கப்படும் இடத்தில் நேற்று (புதன்கிழமை) மதியம் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, தமது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நான்கு வருடங்கள் நிறைவடைந்துள்ளன எனவும், தமக்கான நீதி கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ள உறவுகள், தமது போராட்டங்களில் பங்குபற்றிய பல தாய், தந்தையர்கள் பிள்ளைகளைக் காணாத ஏக்கத்துடனேயே உயிழந்துள்ளனர் எனக் குறிப்பிட்டனர்.

அத்துடன், தமது பிள்ளைகள் அழிக்க முடியாத சாட்சிகளாகியுள்ளனர் எனவும், அவர்களுக்குநீதிகிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகளை தாம் எதிர்பார்த்து நிற்பதாக அவர்கள் இதன்போது தெரிவித்துள்ளனர்.

# மண் அகழ்வைத் தடுத்து நிறுத்த மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரிக்கை

கொழும்பு, பெப். 25

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண் அகழ்வுகள் காரணமாக விவசாய நிலங்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றன எனவும் உடனடியாக இவற்றைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை முன்வைத்தனர்.

சட்ட விரோதமான முறையில் அதிகளவான மண் அகழப்படுவதன் காரணமாக விவசாய நிலங்கள் பாதிக்கப்படுகின்றன எனவும் இதன்போது விவசாயிகள் சுட்டிக்காட்டினார்கள். மட்டக்களப்பு மாவட்ட விவசாய குழுக்கூட்டம் நேற்று (புதன்கிழமை) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மாவட்ட உதவி திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.புண்ணியமூர்த்தி, மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர்,மாவட்ட விவசாய பணிப்பாளர்,மாகாண நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் மற்றும் பிரதேச செயலாளர்கள்,திணைக்களங்களின் தலைவர்கள்,விவசாய திணைக்களங்களின் தலைவர்கள் என பலர் கலந்துகொண்டனர். எதிர்வரும் காலபோக நெற்செய்கை ஆரம்பமாகவுள்ள நிலையில் அது தொடர்பில் ஆராயும் வகையில் இந்த கூட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

இதன்போது ஏறாவூர்ப்பற்று கிரான் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் முன்னெடுக்கப்படும் மண் அகழ்வுகள் காரணமாக விவசாய காணிகள் பாதிக்கப்படுகின்றமையுடன் வீதிகளும் போக்குவரத்து செய்யமுடியாத நிலையிலுள்ளதாகவும் மண் அகழ்வுகளை நிறுத்த நடவடிக்கையெடுக்குமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

குறித்த பிரதேச செயலகப்பிரிவுகளில் உள்ள அதிகாரிகள்,பொலிஸார்,கனிம வள திணைக்களம் உட்பட அனைவரையும் ஒருங்கிணைத்து இது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கையெடுக்கப்படும் என மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் இதன்போது தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் எதிர்வரும் காலத்தில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் இரசாயன உரங்களை தவிர்த்து இயற்கை உரங்களை பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் இதன்போது வலியுறுத்தப்பட்டது. விவசாய நடவடிக்கைகளுக்கு நீர்ப்பாசனத்தினைப்பெற்றுக்கொள்ளுதல், இலவச உரம்பெற்றுக்கொள்ளுதல் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது.

அத்துடன் தற்போது பெரும்போக அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் விவசாயிகளின் நெல் கொள்வனவு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன் விவசாயிகளுக்கான முளை நெல் வழங்குதல் பற்றியும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

எதிர்வரும் 6 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரையில் பிரதேச செயலக மட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தை நடத்துவதற்கான அறிவிப்புகளும் இதன்போது வழங்கப்பட்டன.

# கிரிக்கெட் சபை தேர்தலில் போட்டியிட பத்தரமுல்லே சீலரத்ன தேரர் வேட்பு மனு!



இலங்கை கிரிக்கெட் சபையின் உப தலைவர் பதவிக்கு பத்தரமுல்லே சீலரத்ன தேரர் வேட்பு மனுதாக்கல் செய்துள்ளார்.

நேற்று (புதன்கிழமை) அவர் இவ்வாறு வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. வன்னி மாவட்டத்தின் கிரிக்கெட் அமைப்பின் சார்பிலேயே அவர் வேட்பு மனுதாக்கல் செய்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# யாப்பு சீர்திருத்த நிபுணர் குழுவின் செயற்பாடுகள் திருப்திகரமாகவுள்ளன!

## விஜேசந்திரன் தெரிவிப்பு

இலங்கை அரசியல் யாப்பு திருத்தத்தில் யோசனைகளைப் பெற்றுக் கொள்கின்ற நிபுணர் குழுவின் செயற்பாடுகள் திருப்திகரமாக அமைந்துள்ளன என பேராசிரியர் மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகமுமான சங்கரன் விஜேசந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று (புதன்கிழமை) நுவரெலியாவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

நாங்கள் அண்மையில் மலையக மக்கள் முன்னணி என்ற வகையில் அரசியல் யாப்பு நிபுணர் குழுவை சந்தித்து எங்களுடைய யோசனைகளை முன்வைத்துள்ளோம். இதன்போது மிகவும் ஆர்வத்துடனும் அக்கறையோடும் அவர்கள் எங்களுடைய முன்வைக்கப்பட்ட யோசனைகள் தொடர்பாக விளக்கங்களைக் கேட்டறிந்து கொண்டனர்.

நாங்கள் முன்வைத்துள்ள அநேகமான யோசனைகள் புதிய விடயங்கள் எனவும் இது தொடர்பாக இன்னும் அதிகமான விளக்கங்கள் தேவைப்படுவதாகவும் எனவே மீண்டும் ஒரு முறை எங்களுடைய குழுவினரை சந்திக்க நேரம் ஒதுக்கித் தருவதாகவும் முழுமையான தகவல்களை இதன்போது தங்களுக்கு பெற்றுத் தருமாறும் அவர்கள் எங்களுடைய தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணனிடம் கேட்டுக் கொண்டனர்.

அதற்கு அமைய எங்களுடைய தலைவரின் பணிப்புரைக்கு அமைவாக எனது தலைமையில் மூவர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்த குழுவில்



மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் ஏ.லோரன்ஸ் உப தலைவர் சிவலிங்கம் சதீஸ்குமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். நாங்கள் ஒரு குழுவாக செயற்பட்டு இன்னும் பல தகவல்களை அரசியல் யாப்பு சீர்திருத்த நிபுணர் குழுவிடம் கையளிக்கவுள்ளோம்.

அந்த வகையில் எங்களைப் பொறுத்த அளவில் நாங்கள் எங்களுடைய யோசனைகளில் தனியே மலையக மக்களைப்பற்றி மாத்திரம் யோசனைகளை முன்வைக்காது குறிப்பாக இலங்கையில் வாழுகின்ற சிறுபான்மை மக்களாகிய மலையகத் தமிழர்கள், வடக்குக் கிழக்குத் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய மூன்று தரப்பினருடைய விடயங்கள் தொடர்பாக நாங்கள் யோசனைகளை முன்வைத்துள்ளோம்.

மலையக மக்கள் முன்னணியை பொறுத்த அளவில் நாங்கள் 89 ஆம் ஆண்டு மறைந்த தலைவர் அமரர் சந்திரசேகரனுடன் இணைந்து இந்த கட்சியை ஆரம்பித்த பொழுது நாங்கள் இலங்கையிலே இருக்கின்ற அனைவருடைய குறிப்பாக சிறுபான்மை மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடனேயே செயற்பட்டு வந்தோம். இதன் காரணமாக பலமுறை எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டோம்.

ஆனாலும் நாங்கள் எங்களுடைய கொள்கையில் இருந்து என்றுமே தடம் புரண்டமை கிடையாது. அதே நேரம் ஒன்றிணைந்த இலங்கைக்குள் மலையகம் எமது தாயகம் நாம் ஒரு தேசியம் என்ற கொள்கையையும் ஒரு நாளும் விட்டுக் கொடுக்கமாட்டோம். இன்று எங்களுடைய தலைவர் இராதாகிருஸ்ணன் மாத்திரமே மலையகத்தில் அரசியல் ரீதியாக அனுபவம் வாய்ந்த ஒரு தலைவராக இருக்கின்றார்.

ஏனைய தலைவர்களை நான் குறையாகக் கூறவில்லை. ஆனாலும் அனுபவ ரீதியாக எங்களுடைய தலைவர் முன்னாள் இருக்கின்றார். மேலும் நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால் மாத்திரமே எங்களுடைய உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கு தற்பொழுது அரசாங்கம் அமைத்துள்ள அரசியல் நிபுணர் குழுவை சரியான முறையில் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே எனது எண்ணமாகும்.

எனவே இந்த அரசியல் நிபுணர் குழுவிற்கு எங்களைப்போன்று இன்னும் மலையகத்தில் இருக்கின்ற அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள், மலையக பெண்கள் என அனைத்து தரப்பினரும் தங்களுடைய யோசனைகளை முன்வைக்க வேண்டும் என்ற விடயத்தையும் நான் எதிர்பார்க்கின்றேன்.

இந்த அரசியல் சீர்திருத்த நிபுணர் குழு சிறுபான்மை சமூகம் தொடர்பாக அதிக கவனம் செலுத்துவதை காணக்கூடியதாகவுள்ளது. இந்த பரிந்துரைகள் அனைத்தும் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதே எங்களுடைய எதிர்பார்ப்பாகும். இதுவும் நல்லாட்சி அரசாங்கத்தின் அரசியல் யாப்பு சீர்திருத்தம் போல அமைந்து விடக்கூடாது.

# மட்டக்களப்பில் கோர விபத்து: சிறுமி உட்பட இருவர் காயம்!



மட்டக்களப்பில் நேற்று (புதன்கிழமை) காலை இடம்பெற்ற விபத்தில் முன்பள்ளிக்கு சென்ற சிறுமி உள்ளிட்ட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு நகரில் உள்ள மணிக்கூண்டு கோபுரத்துக்கு அருகில் ஓட்டோவுடன் தனியார் பஸ் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது ஓட்டோவை ஓட்டிச்சென்ற தந்தையும் அதில் பயணம் செய்த முன்பள்ளிக்கு சென்ற சிறுமியும் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டதுடன் பஸ்ஸின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமைய போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தனிமைப்படுத்தல் விதி மீறிய 12 பேர் கைது!



தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கடந்த 24 மணித்தியாலத்தில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியை கடைப்பிடித்தல் போன்ற விதிமுறைகளை மீறி செயற்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, கடந்த ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில், தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் 3 ஆயிரத்து 222 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், இவர்களில் 3 ஆயிரத்து 150 பேருக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டங்களின் அடிப்படையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கொரோனாத் தொற்றுப் பரவலைத் தவிர்க்கும் வகையில் நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்குமாறும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண வலியுறுத்தியுள்ளார்.

# முத்துராஜவல சரணாலயம் உடனடியாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ்!

## கொண்டுவர ஜனாதிபதி அறிவுறுத்தல்



முத்துராஜவல ஈரவலய சரணாலயத்தை உடனடியாக சுற்றாடல் அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் கொண்டுவருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர இதனை குறிப்பிட்டுள்ளார். குறித்த ஈரவலய சரணாலயத்தின் சுற்றுச்சூழல் கட்டமைப்பை பல்வேறு தரப்பினர் கடந்த நாள்களில் சேதமாக்கியதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதற்கமைய அதி முக்கியத்துவமிக்க குறித்த சுற்றாடல் கட்டமைப்பை பாதுகாப்பதற்காக முழுமையான செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார் என அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

# சமூக வலைத்தளத்தினூடாக பண மோசடி; அவதானம்!

## பொலிஸாரின் முக்கிய கோரிக்கை

சமூக வலைத்தளத்தினூடாக பண மோசடியில் ஈடுபட்டு வந்த 4 நைஜீரிய பிரஜைகள் உள்ளிட்ட 8 பேரடங்கிய குழுவொன்று கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சமூக வலைத்தளத்தினூடாக அறிவித்தலொன்று விடுக்கப்பட்டு 17 லட்சத்து 45 ஆயிரம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக கடந்த வாரம் பேலியகொடை பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடொன்று கிடைத்துள்ளது.

பரிசுப்பொதியொன்று கிடைக்கவுள்ளதாகவும் அதனைப் பெற்றுக்கொள்ள பணத்தை வைப்பிலிடுமாறும் கூறப்பட்டதை அடுத்து முறைப்பாடு வழங்கியவர்களால் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் களனி குற்ற விசாரணைப் பிரிவினரால் விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் வெவ்வேறு சிம் அட்டைகள் மற்றும் முகப்புத்தக கணக்குகளை பயன்படுத்தி மோசடியில் ஈடுபடுகின்ற குழுவொன்று இயங்குவது தெரியவந்துள்ளது.

இந்த குழுவிலிருந்த நைஜீரிய பிரஜைகள் நால்வர் உள்ளிட்ட 8 பேர் களனி குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளில் குறித்த குழுவிலுள்ள நைஜீரிய பிரஜையொருவர் வசித்து வந்த கல்கிஸையிலுள்ள வீடொன்று சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

அந்த வீட்டிலிருந்து மடிக்கணினி வெவ்வேறு நாடுகளில் பயன்படுத்துகின்ற 9 சிம் அட்டைகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை போலி நாணயத்தாள்களை அச்சிடுவதற்கு பயன்படுத்தப்படும் 100 கடதாசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பில் களனி குற்ற விசாரணைப் பிரிவு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

பேஸ்புக், வைபர், வட்ஸ்அப் உள்ளிட்டவற்றினூடாக இவ்வாறான மோசடிகள் இடம்பெறக்கூடும். எனவே இவை தொடர்பில் பொது மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

# கோட்டாபயவின் வாக்குமூலத்தை வைத்தே இலங்கை மீது சட்ட நடவடிக்கை எடுக்கலாம்!

## அமெரிக்காவிடம் கூட்டமைப்பு எடுத்துரைப்பு

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நானே கொன்றேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சொன்னமை மனித உரிமை மீறலுக்கான பெரிய சாட்சியம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருடனான சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்தச் சாட்சியத்தை வைத்தே அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்பிலிட்ஸிற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் நேற்று (புதன்கிழமை) காலை தனியார் விடுதியொன்றில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், கூட்டமைப்பு சார்பாக, தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் வடக்கு மாகாண அவைத்தலை



வர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக சிறிதரன் குறிப்பிடுகையில் –

ஜெனிவாவில் கொண்டுவரப்பட இருக்கின்ற தீர்மானம் தொடர்பாக மற்றும் அந்தத் தீர்மானத்துக்கு இருக்கின்ற சவால்கள், அந்த சவால்களை எதிர்கொள்வதற்காக ஒருங்கிணைந்த நாடுகள் எவ்வாறான விடயங்களை எதிர்கொள்கின்றன, அந்தச் சவால்களை அவர்கள் எவ்வாறு சமாளிக்கப் போகிறார்கள், அதற்கு தமிழர் தரப்பான எங்களுடைய பங்களிப்பு என்ன மற்றும் ஏனைய நாடுகளுடன் கலந்துரையாட வேண்டிய விடயங்கள் என்பன தொடர்பாக ஆராயப்பட்டது.

மேலும், இன்றுள்ள களச்சூழலில் தமிழ் மக்கள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் மற்றும் இந்த அரசாங்கம் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டம் நடந்து முடிந்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தவிசாளர்கள், பொதுமக்கள் போன்றோரை விசாரணை என்ற போர்வையில் அச்சுறுத்தி வருவதையும் நாங்கள் அவருடன் கலந்துரையாடியுள்ளோம்.

அத்துடன், அண்மையில் அம்பாறையில் உகுண பிரதேசத்தில் உரையாற்றும்போது, 'பிரபாகரனை நான் கொன்றேன்' என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சொன்னதே மனித உரிமை மீறலுக்கான பெரிய சாட்சியம். அதை வைத்தே அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்பிலிட்ஸிடம் வலியுறுத்தியுள்ளோம்.

அண்மையில் உலகத்தமிழர் பேரவை, மனித உரிமைகள் மற்றும் உலகளாவிய நீதிமையம், நியூயோர்க் பல்கலைக்கழகம், அமைதி மற்றும் நீதிக்கான இலங்கை பிரசாரம் மற்றும் கனேடிய தமிழர் பேரவை ஆகிய அமைப்புக்கள் இணைந்து நடத்திய மெய்நிகர் கலந்துரையாடலில் கலந்து கொண்ட, போர்க்குற்றங்கள் மற்றும் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ஸ்டீபன் ரொப் ஸ்ரீலங்காவில் கடந்த 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த சந்தர்ப்பத்தில் பாதுகாப்புச் செயலாளராகப் பணியாற்றிய தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களைக் கொலை செய்ததாக ஒப்புக்கொண்டதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், இவ்வாறான விடயங்களைச் சாட்சியமாக வைத்து நடவடிக்கை எடுக்க முடியுமென அமெரிக்க தூதுவர் அலைனா டெப்பிலிட்ஸிடம் சுட்டிக்காட்டியுள்ளோம்' என சிறிதரன் குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச விண்வெளி நிலையத்தின் செயற்றிட்டத்தில் பங்கேற்கின்றது மட்டக்களப்பு ட்ரீம் ஸ்பேஸ் அக்கடமி!



ட்ரீம் ஸ்பேஸ் அக்கடமி – இலங்கையின் மட்டக்களப்பை மையமாகக் கொண்ட ஒரு சமூக புத்தாக்க நிலையம் சர்வதேச விண்வெளி நிலையத்தின் செயற்றிட்டத்தில் பங்கேற்கிறது.

இந்த விண்வெளி செயற்றிட்டத்தில் இலங்கை இளைஞர்கள் 18 முதல் 23 வயதுக்குட்பட்டோர் பங்கேற்பது இதுவே முதல்முறையாகும்.

ட்ரீம்ஸ்பேஸ் அக்கடமி இலங்கையில் வசதி குறைந்த இளைஞர் யுவதிகளுக்கு விண்வெளி ஆய்வகம் உள்ளிட்ட மேம்பட்ட ஆய்வகங்களுக்கு நிபந்தனையற்ற அணுகலுடன் திறன் வலுவூட்டல் செய்கின்ற ஒரு ஸ்தாபனமாகும்.


ரெட் கிலோவ்வின் விதைகள் மற்றும் நைதரன் உருவாக்கும் பக்டீரியாக்களுடன் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு ஒரு தன்னிறைவான எக்ஸோ ஆய்வு கூடத்தை அனுப்புவதன் மூலம் உயிரினங்களில் மைக்ரோ கிராவிட்டி விளைவுகளை ட்ரீம்ஸ்பேஸ் அக்கடமி அதன் முதல் விண்வெளி திட்டத்தில் ஆராய்கிறது.

இந்தச் செயற்றிட்டம் சைகனுஸ் என்.ஜி.– 15 விண்கலம் மூலம் 20 பெப்ரவரி 2021 இலங்கை நேரப்படி இரவு 11.06 மணிக்கு வலலோப்ஸ் ஐஸ்லாந்து, விர்ஜினியா, அமெரிக்காவிலிருந்து சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பப்பட்டது.

விண்வெளி மற்றும் பூமியில் நாற்றுகளின் வளர்ச்சியை ஒப்பிடுவதற்கு பூமியில் உள்ள அணிகள் மற்றும் விண்வெளியிலும் ஒரே நேரத்தில் பரிசோதனையை மேற்கொள்ளுவதோடு, ரெட் கிலோவ்வின் மற்றும் ரைசோபியம் இடையேயான தொடர்பு பற்றி ஆய்வையும், ஐ.எஸ்.எஸ். இலிருந்து படங்களில் வேர் முடிச்சு மற்றும் தாவர வளர்ச்சியை அடையாளம் காண இயந்திர கற்றல் கருவியை உருவாக்கும் செயன்முறையில் ட்ரீம்ஸ்பேஸ் அக்கடமியின் விண்வெளி ஆய்வகத்தின் கார்டியன் சம்ரத், குழு உறுப்பினர்களான ஃபாலில், அபிஷேத் வர்மன், ரிந்தினி, மற்றும் அபிலாஜினி ஆகியோருடன் இந்த பரிசோதனையை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த ஆய்வு செயன்முறையில் இலங்கையிலிருந்து பங்குபற்றும் ஒரே ஒரு குழாம் டிரீம்ஸ்பாஸ் அக்கடமி என்பது குறிப்பிடத்தக்கது

## இலங்கைக்கான அமெ. தூதர் யாழ். நூலகத்துக்கும் விஜயம்!






இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பி ரெப்லிற்ஸ் அம்மையார் நேற்று(புதன்கிழமை) யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திற்கு விஜயததை மேற்கொண்டு பார்வையிட்டுள்ளார்.

இதன்போது நூலகத்தில் வைத்து யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனையும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பி ரெப்லிற்ஸ் அம்மையார் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குறித்த சந்திப்பில் யாழ் மாநகர சபையின் ஆணையாளர் உள்ளிட்ட சில உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள தூதுவர் பல தரப்பினரையும் தொடர்ச்சியாக சந்தித்துவரும் நிலையிலேயே நூலகத்திற்கும் விஜயத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை; 40 விசேட பரீட்சை நிலையங்கள்

கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்ட க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்காக 40 விசேட பரீட்சை நிலையங்களை அமைக்கவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி அமைக்கப்படும் குறித்த விசேட நிலையங்களுக்கு 50 ஆயிரம் அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அவ்வாறு நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு கொரோனாத் தொற்று பரவாமல் இருப்பதற்காக நடவடிக்கைகளை எடுக்க சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை 2021 மார்ச் முதலாம் திகதி முதல் மார்ச் 10 திகதி வரை நடைபெறவுள்ளது.

நாடு முழுவதும் 6 லட்சத்து 22 ஆயிரத்து 352 பேர் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளனர் எனவும் 4 ஆயிரத்து 513 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித குறிபிட்டார்.

## சாதாரண பரீட்சையில் ஈடுபடுபவர்களுக்கு உடன் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுக்குக!

### அரசுக்கு ஆசிரியர் சேவைச் சங்கம் கோரிக்கை

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு முன்னதாக, பரீட்சை நடவடிக்கைகளில் ஈடுபவர்களுக்கு கொரோனா தடுப்பூசியை பெற்றுக் கொடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தால் இது தொடர்பான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை நடவடிக்கைகளில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும், பங்கேற்கவுள்ளனர் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நிலவும் அபாயகரமான சூழலைக் கருத்திற்கொண்டு, ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் ஏனைய ஊழியர்களுக்கு கொரோனா தடுப்பூசியை பெற்றுக் கொடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம் பிரதிநிதிகள் பாக். பிரதமரை சந்திப்பதை தடுத்து கோழைத்தனமாக செயற்படுகிறது அரசு!

## ஹக்கீம் காட்டத்துடன் கருத்து



முஸ்லிம் பிரதிநிதிகள் பாகிஸ்தான் நாட்டு பிரதமர் இம்ரான் கானை சந்திப்பது அவரது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்று கோழைத்தனமான பதிலை அரசாங்கம் குறிப்படுகிறது.

தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகள் திட்டமிட்ட வகையில் மீறப்படுகின்றன.

அரசாங்கம் தனது பலத்தை பாதுகாத்துக் கொள்ள சிறுபான்மை சமூகத்தின் மீது வன்முறைகளைத் தூண்டிவிடுகிறது. உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள இறுதி வரை ஒன்றிணைந்து போராடுவோம் என நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கட்டாய ஜனாஸா தகனத்துக்கு எதிரான தேசிய அமைப்பு ஏற்பாடு செய்த எதிர்ப்பு போராட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக இடம் பெற்றது.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிக்கும் முஸ்லிம் சமூகத்தினரது உடல்களை கட்டாயம் தகனம் செய்வோம் என்பதில் அரசாங்கம் உறுதியுடன் நிற்கிறது.

உடல்களை அடக்கம் செய்யலாம் என நிபுணர் குழுவின் அறிக்கையைக் கூட இனவாதம் மறைத்துள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடுகள் கீழ்த்தரமான முறையில் காணப்படுகின்றன.

நாட்டில் தமிழ்,முஸ்லிம் சமூகத்தினர் அரசாங்கத்தின் இனவாத பிடியில் பாரிய நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளார்கள்.

இந்த விடயம் தொடர்பாக சர்வதேச நாடுகள் அவதானம் செலுத்த வேண்டும்.

நாட்டுக்கு வருகை தந்துள்ள பாகிஸ்தான் நாட்டு பிரதமர் இம்ரான் கானை சந்திக்க 15 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்தோம். எமது கோரிக்கை மறுக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாகிஸ்தான் நாட்டு பிரதமர் இம்ரான்கானை சந்திப்பது அவரது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என அரசாங்கம் கோழைத்தனமாக பதிலை குறிப்பிடுகிறது.

அரசாங்கத்தின் பலவீனத்தன்மையையும், சிறுபான்மை சமூகத்தின் மீதான அடக்குமுறையையும் சர்வதேசம் தற்போது நன்கு அறிந்துள்ளது.

சர்வதேச அரங்கில் இலங்கையை நெருக்கடிக்குள்ளாக்குவது எமது நோக்கமல்ல. ஆனால் அரசாங்கம் அவ்வாறான நிலைக்கு எம்மைக் கொண்டு செல்கிறது.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழக்கும் முஸ்லிம் சமூகத்தினரது ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மாத்திரம் முன்வைத்துள்ளோம். உடல்களை அடக்கம் செய்வதால் சுற்றாடலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பதை மருத்துவ சான்றுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

மருத்துவ நிபுணர்களின் அறிக்கையை செயற்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் இனவாத கொள்கை மாத்திரம் தடையாகவுள்ளது.

ஆகவே, இனவாத கொள்கையை துறந்து பொது தன்மையுடன் அரசாங்கம் செயற்பட வேண்டும். உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தொடர்ந்து போராடுவோம். – என்றார்.

# உளுந்தை உடன் சந்தைப்படுத்துக இறக்குமதிக்கு அனுமதி வழங்கல்!

## உற்பத்தியாளருக்கு சம்மேளனம் அறிவுறுத்தல்

கொழும்பு, பெப்.25

உளுந்து இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் உளுந்து செய்கையாளர்கள் தமது உற்பத்திகளை உடன் சந்தைப்படுத்துமாறு வவுனியா மாவட்ட கமக்காரர் ஒழுங்கமைப்புக்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது –

இலங்கை அரசாங்கம் உளுந்தின் கேள்வியைக் கருத்திற்கொண்டு இறக்குமதி செய்வதற்கான அனுமதியை இறக்குமதியாளர்களுக்கு வழங்கியுள்ளது.

இறக்குமதியாளர்களால் விநியோகிக்கக் கூடிய உச்ச விலை 640 ரூபா வரை இருக்கலாமென அறியப்படுகின்றது. இதன் அடிப்படையில் எதிர்காலத்தில் உளுந்தின் சில்லறை விலை 750 – 800 ரூபாக்கு இடைப்பட்டதாகவே இருக்கும். எனவே உளுந்தை சந்தைக்கு விடாது அதிக விலைக்கு விற்க காத்திருக்கும் விவசாயிகள் எதிர்காலத்தில் நட்டமடையக் கூடிய வாய்ப்புகள் உண்டு.

இதேவேளை விதை உளுந்துச் செய்கைக்காக விதையினை விதைகள் உற்பத்தித் திணைக்களத்தில் பெற்ற விவசாயிகள் மீள விதை உளுந்தை தரத்தின் அடிப்படையில் 870 – 920 ரூபாவிற்கு குறித்த திணைக்களத்துக்கு விற்க இயலும்.

இதுவரை விதை உளுந்துக்கான தேவையின் 1/3 கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் விதை உளுந்துகளை மீளச் செலுத்தாதவர்களுக்கான சலுகைகள் எதிர்காலத்தில் மட்டுப்படுத்தப்படும் என்பதையும் குறித்த திணைக்களம் கவனத்திற்கு கொண்டு வருகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு கிழக்கில் தரம் ஒன்றுக்கான மாணவர் தொகையில் பாரிய வீழ்ச்சி!

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

2021ஆம் ஆண்டு பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு இணைந்த மாணவர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களைவிட மிகவும் குறைவானதாகும். இது அபாயகரமானது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கடந்த காலங்களோடு ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் முதலாம் தரத்துக்கு இணைந்த மாணவர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கால் குறைவடைந்துள்ளது. இந்நிலைமை அபாயகரமானது. உலக மக்கள் தொகை வருடந்தோறும் அதிகரித்துச் செல்கின்றதே தவிர குறைவடைவதில்லை. இலங்கையிலும் அதே நிலைதான். ஆனால் தமிழர் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இம்முறை மாணவர் தொகை குறைவடைந்துள்ளமை கவலையான விடயம் என்பதற்கு அப்பால் அபாயகரமானது.

நாட்டில் நடைபெற்ற யுத்தம் நான்கு தசாப்தங்களைக் கடந்தது. அந்தக் காலங்களில்கூட பாடசாலைக்கு முதலாம் தரத்தில் இணைந்த மாணவர்களின் எண்ணிக்கை வருடந்தோறும் அதிகரித்தே சென்றது. ஆனால் இம்முறை வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆயிரக்கணக்கில் மாணவர் எண்ணிக்கை குறைவடைந்தமை பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கான காரணங்களில் பிறப்பு வீதம் குறைவடைந்தது என தனியாகக் கூறிவிட முடியாது. நாட்டின் பொருளாதாரநிலை மிகவும் முக்கியமானது. இதைவிட கிராமப்புறங்களில் உள்ள மக்கள் பெருமளவானோர் நகர்ப்புறத்தை நோக்கி நகர்ந்துள்ளனர். அதற்கு தொழில் வாய்ப்பு ஒருகாரணம் என்பதற்கு அப்பால் பாரம்பரிய தொழில்கள் பல அழிவடைந்துள்ளன. இதனால் வருமானமின்றி பிள்ளைகளை வளர்க்க முடியாத அளவிற்கு பலர் தள்ளப்பட்டுள்ளனர். அரச சேவையில் உள்ள பலர் வங்கிகளில் பெருமளவு பணம் கடனாகப்பெற்று வாழ்க்கை நடத்துகின்றனர். – என்றார்.

# பாகிஸ்தான் – இலங்கை இடையில் ஐந்து உடன்படிக்கைகள் கைச்சாத்து!

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் பிரதமருக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இடையிலான நேரடி இருதரப்பு பேச்சு அலரி மாளிகையில் இடம்பெற்றது.

அதன் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையே பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், கல்வி உள்ளிட்ட துறைகள் சார்ந்த ஐந்து உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

பாகிஸ்தான் வெளியுறவு மற்றும் வர்த்தக அமைச்சர்கள் உள்ளிட்ட தூதுக்குழு பாகிஸ்தான் பிரதமருடன் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது. பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் நேற்று (புதன்கிழமை) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தார்.

அதனை தொடர்ந்து கொழும்பில் இடம்பெறும் வர்த்தக மற்றும் முதலீட்டு மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதமர் இம்ரான் கான், மீண்டும் தனது நாட்டிற்கு திரும்புவதற்கு முன்னதாக இலங்கை கிரிக்கெட் வீரர்களையும் சந்திக்கின்றார்.

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் – 17 கன்னாதிட்டி வீதி ஆதன இல 75 என்ற இலக்கத்தை கொண்ட ஆதனம் ஆனவரிப்பதிவேட்டில் தம்பு குமாரசாமி என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையை நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தினை இராசா ராஜேஸ்வரன் பெண் லோகேஸ்வரி சுவிஸ்லாந்திலிருந்து தத்துவக்காரன் இராசா ராஜேஸ்வரன் மூலம் பிரசித்த நொத்தாரிசு A.பிறேமலிங்கம் முகதாவில் வரையப்பட்ட 82ஆம் இலக்க 18.09.2017ஆம் திகதியிடப்பட்ட அறுதி உறுதி மூலம் சிறிஸ்கந்தராசா என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

குறித்த 82ஆம் இலக்க அறுதி உறுதியில் பிரசித்த நொத்தாரிசு A.பரமலிங்கம் முகதாவில் 08.02.2012ஆம் திகதி 14ஆம் மற்றும் 15ஆம் இலக்கங்களில் நிறைவேறிய நிறைவேற்றுனர் உறுதியும்வெளிப்படுத்தல் உறுதியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கு இறை நல்லூர் பிரதேச செயலகம் J/99 கிராமசேவையாளர் பிரிவு யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட "அடியார் குணாளன் வயல்" உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.நிர்மலேந்திரன் 15.03.2013ஆம் திகதி 1364D ஆம் இலக்கத்தில் அளந்து வரைந்த நில அளவைப்படத்தில் துண்டுகள் 1 மற்றும் 2 எனச் சுட்டப்படுள்ள ஆதனம் 1ஆம் துண்டு குளிகள் 2.843.

**எல்லைகள்**

வடக்கு:- பொதுப்பகுதியும் கிணறும் 2ம் துண்டும்.
தெற்கு:- கன்னாதிட்டி வீதி
கிழக்கும் மேற்கும்:- இரா.லோகேஸ்வரியின் ஆதனம்.
2ம் துண்டு நெற்பரப்பு 0.566

**எல்லைகள்**

வடக்கு, கிழக்கு :- இரா.லோகேஸ்வரியின் ஆதனம்.
தெற்கு:- பொதுப்பகுதியும் இரா.லோகேஸ்வரியின் ஆதனமும் கன்னாதிட்டி வீதியும்.
மேற்கு:- பொதுப்பகுதியும் கிணறும்.
இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்

தற்போது முருகையா சிறிஸ்கந்தராசா இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது முருகையா சிறிஸ்கந்தராசா எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**

காலைக்கதிர்
Kalaikkathir

# செய்வன திருந்தச் செய்




தம்பிராசா யுகேஸ்
அதிபர், சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

ஒவ்வொரு மனிதனும் தான் வாழுங்காலத்தில் பல்வேறு பொறுப்புக்களையும் கடமைகளையும் புரிய வேண்டிய நிலையிலுள்ளான். பெறுதற்கரிய பிறவியாகிய மானிடப் பிறவியைப் பெற்ற ஒவ்வொருவரும் அதற்கேயுரித்தான பணிகளை அந்த அந்தக் காலத்திலேயே உயர்ந்த மட்டத்தில் நிறைவேற்ற வேண்டிய தேவையுள்ளது. அதாவது அந்த குடும்பப் பொறுப்பாகவும் சமூகப் பொறுப்பாகவும் தத்தமக்கேயுரிய தொழில் ஒப்பந்தக் கடப்பாடுகளாகவும் அவை அமைந்து காணப்படுவதோடு அவை ஒவ்வொன்றினுள்ளும் கவனக்கடப்பாடும் உயர்ந்த மட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். அவை சமயத்தினூடும், சட்டத்தினூடும், வழக்காறுகளூடும் வலியுறுத்தப்பட்டு வந்தாலும் தமிழிலக்கியப் பரப்பிலும் அவை மிகையாகக் காணப்படுகின்றன.

ஆத்திசூடியைத் தந்த ஔவைப் பிராட்டி எளிய நடையில் ‘செய்வன திருந்தச் செய்’ எனப் பாடினார். அதாவது இங்கு ‘செய்வன’ என்னும்போது ஒவ்வொருவராலும் ஆற்றப்படும் செயல்களைக் குறிக்கும். இங்கு கருமங்கள் எனும் போது குடும்பப் பொறுப்பை, சமூகப் பொறுப்பை, தொழில் ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றும் வண்ணம் ஆற்றப்படும் கடமைகளைக் குறிப்பதோடு சுயதேவையின் பொருட்டு ஆற்றப்படும் கருமங்களையும் குறிக்கும். ‘திருந்தச் செய்’ எனும்போது அவற்றை உயர்ந்த மட்டத்தில் நிறைவேற்றுவதைக் குறிக்கும். உயர்ந்தமட்டம் எனும்போது உரிய அதிகாரவரம்பில் எதிர்பார்க்கும் மட்டத்தில் நிறைவேற்றுவதைக் குறிக்கும். இதனையே ஔவையார் ‘திருந்தச் செய் என்றார்.’

குடும்பப் பொறுப்புக்களை நிறைவேற்றல், சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுதல் எனும் அம்சங்களில் காணப்படும் சட்ட ரீதியான கணிப்பைவிட ஒப்பந்தக் கடப்பாடுகள் மீதானதும், நிர்வாகப் பணிகளை நிறைவேற்றலின் மீதானதுமான சட்டத்தின் பிணைப்பு அதிகமாகக் காணப்படும். சட்டத்தினால் அங்கீகரிக்கப்படும் அல்லது அமுல்படுத்தப்படும் உடன்படிக்கைகள் ஒப்பந்தங்களாகக் கொள்ளப்படும். அதிலுள்ள கடப்பாடுகள் ஒப்பந்தம் செய்யும் தரப்பாரால் தீர்மானம் செய்யப்படும். ஆனால் நிர்வாகப் பணிகளில் வழங்கப்படும்



அதிகாரங்கள், தற்துணிவுகள், கடமைப் பொறுப்புகள் சட்டத்தின்படி நிர்ணயம் செய்யப்படும். அவ் அதிகாரங்கள், தற்துணிவுகள் மற்றும் கடமைகளை சுமத்தப்படுபவரே அவற்றிற்கு வகை கூறலும் வேண்டும்.

நிர்வாகச் சட்டத்தின் நோக்கில் நீதிமன்றங்கள் யாரேனும் நபருக்கு சட்டவாக்க சபையால் வழங்கப்பட்ட அதிகாரங்கள், தற்துணிவுகள் தொடர்பாகக் கேள்வி எழுப்பமாட்டாது. ஆனாலும் அவ் அதிகாரங்கள், தற்துணிவுகள் அந்நபரால் உரிய அதிகார வரம்பினுள் பிரயோகிக்கப்பட்டதா என்பது தொடர்பிலும் கடமை மீறல் தொடர்பிலும் கவனஞ்செலுத்தும். எனினும் துணைநிலைச் சட்டவாக்கம் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்கள், தற்துணிவுகள் தொடர்பிலும் அவற்றின் பிரயோகங்கள் தொடர்பிலும் நீதிமன்றம் கேள்வி எழுப்பும். குறித்த ஒரு நபருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள், கடமைகள் என்பவற்றை அந்நபர் பிறிதொரு நபருக்கு உரிய முறையில் கையளிக்கக்கூடியதாக இருப்பினும் அவருக்கு வழங்கப்பட்ட தற்துணிவதிகாரத்தைக் கையளிக்க முடியாது.

சமய குரவர்களில் ஒருவரான மாணிக்கவாசகரின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவம் ஒன்றை இத் தருணத்தில் மீட்டுப் பார்ப்பது சமய வழியிலும் நமது சிந்தனையைப் புதுப்பிக்க இயலும், பாண்டிய நாட்டின் அரசவையில் முதலமைச்சராக இருந்த மணிவாசகர் ஒருமுறை மன்னனின் கட்டளைப்படி குதிரைகள் வாங்கப்புறப்பட்டார். எனினும் திருப்பெருந்துறையில் தமை ஆட்கொண்ட இறைவனிடம் சரண் புகுந்தார். வந்த கடமையை மறந்து தான் கொண்டு வந்த பொன், பொருளை எல்லாம் சிவப்பணியில் செலவிட்டார். தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் சிவனிலும், சிவப் பணியிலும் ஒப்புவித்தார். குதிரைகள் எப்போது வரும் என்றுகேட்டு வந்த ஓலைக்கு இறைவனின் பணிப்பின் பேரில் ஆவணி மூல நாளில் குதிரைகள் வரும் என்று பதில் அனுப்பினார். எனினும் உரிய நாளில் குதிரைகள் வராதபடியால் மன்னன் மணிவாசகரை சிறையில் இட்டான். இதனையே திருவாசகத்தில், குழைத்த பத்தில் மாணிக்கவாசகர்.

**அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமுங்**
**குன்றே அனையாய் என்னையாட் கொண்டபோதே**
**கொண்டிலையோ**
**இன்றோர் இடையூ றெனக் குண்டோ எண்டோன்**
**முக்கண் எம்மானே**
**நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு**
**நாயகமே’ என்று பாடுகிறார்.**

இங்கு முதலமைச்சரான மாணிக்கவாசகர் தனது கடமையைப் புரியாதபடியால் மன்னனின் தண்டனைக்கு உள்ளாகின்றார் அவர் அரச கடமையைப் புறந்தள்ளியமையால் அதற்குரிய தண்டனையை அனுபவிக்கின்றார். மணிவாசகர் அரசாங்கத்தின் ஓர் அங்கமாக இருந்து கொண்டு பொதுக் கடமையை உதாசீனம் செய்ததோடு மக்களின் பணத்தை உரிய முறையில் செலவு செய்யவுமில்லை. இலங்கைத் தண்டனைச் சட்டக்கோவையின் அத்தியாயம் பிரிவு 162 எவரேனும் ஆளுக்கு அல்லது அரசாங்கத்துக்கு ஊறு ஏற்படுத்தும் கருத்துடன் பகிரங்க ஊழியர் சட்டப் பணிப்புக்கு கீழ்ப்படியாமையால் கிடைக்கும் தண்டனை பற்றிக் குறிப்பிடுகின்றது. அரசாங்கத்தின் ஒவ்வொரு உறுப்பும் மக்களின் பணத்தில் இயங்குபவை. அவை உதாசீனம் செய்யமுடியாத கடமைப் பொறுப்பைக் கொண்டுள்ளதுடன் பொதுப் பணத்தை உரியவாறு செலவிடுவதுடன் மக்களுக்கு, மக்கள் பிரதிகள் கொண்ட சட்டவாக்க சபைக்கு வகை கூறலும் வேண்டும். இதனாலேயே மாணிக்கவாசகர் தண்டனைக்குள்ளாக நேரிடுகின்றது.

இக்கதையில் வெளிப்படும் இன்னொரு தத்துவம் மக்களின் பொதுப்பணத்தை அவர்களின் அபிவிருத்திக்காக அதிகம் செலவிடாது அவர்களின் துன்பந்துடைக்கப் பயன்படாது. தனியே போர் முனைப்புக்காக குதிரைகள் வாங்கவும் போருக்கான ஆயத்தமும் செய்த மன்னனும் பிரம்பால் அடித்த வலியை உணர நேரிடுகிறது. அப்போதுதான் சிவப் பணிக்கு செலவிடுவதே மக்கள் நலனுக்கு செலவிடுவதற்கு ஒப்பாகும் என்ற உண்மையை மன்னன் உணர்ந்தான். போரைவிட மக்கள் பணியே முதன்மையானது. சமயம் என்பது வாழ்வியல் நெறி. ஆக, சமயப் பணி என்பது மக்களின் துயர் துடைத்து சிறப்பான வாழ்க்கையைத் தொடர வகுக்கும் பாதை. அது போருக்கான முனைப்பைவிட முதன்மையானது என மன்னன் உணர்ந்தான். வெறுமனே நாடாளுமன்றில் பாதுகாப்புச் செலவினத்துக்கான நிதியானது கல்வி மற்றும் பொதுப்பணிக்கான நிதியிலும் அதிகரித்திருப்பின் அது சிறப்பாகாது. அவை ஒறுக்கப்பட வேண்டியவை. ஆகவே ஒவ்வொரு செயலும் நியாய மானதாக அமையவேண்டும். அந்நியாயம் எனப்படுவது சரியானதாக, மிகப்பொருத்தமானதாக, பொது நலனுக்கு உகந்ததாக அமைதல் வேண்டும்.

பொதுவாக ஓர் நிர்வாக ரீதியான கருமம் வலிதானதாக அமைய பின்வரும் அம்சங்கள் தாக்கம் விளைவிப்பனவாக அமையும். அவை செயலைப் புரிவதற்குரிய ஆற்றல். செயலியினது தன்மை, செயலைப் புரிவதில் பிர யோகிக்கப்பட்ட தற்துணிவு, மேற்கொள்ளப்பட்ட நட வடிக்கை முறை என்பனவாகும்.

பொதுவாக ஓர் நிர்வாக ரீதியான கருமம் வலிதானதாக அமைய பின்வரும் அம்சங்கள் தாக்கம் விளைவிப்பனவாக அமையும். அவை செயலைப் புரிவதற்குரிய ஆற்றல். செயலியினது தன்மை, செயலைப் புரிவதில் பிர யோகிக்கப்பட்ட தற்துணிவு, மேற்கொள்ளப்பட்ட நட வடிக்கை முறை என்பனவாகும். முறைப்படி தாபிக் கப்பட்ட சபை ஒன்றே தமது அதிகார வரம்புக்குள் வரும் செயலைப் புரிதல் வேண்டும் இதுவே ஆற்றல் எனப்படும். பாண்டிய மன்னனால் மணிவாசகர் முறைப்படி நியமிக்கப்பட்ட ஒருவர்தான் எனினும் அவரது செலவினத் தலைப்புகள் அவருக்கும் அதிகாரம் அளிக்கப்படாத செயல்களாகும். அவை நிர்வாக முறையில் செய்யப்பட முடியாதவை.

செயலின் தன்மை எனும் பொழுது அதிகாரம் எந்நோக்கத்திற்கு அளிக்கப்பட்டதோ அந்நோக்கம் அடையும் வகையில் புரியப்பட வேண்டும். அவ்வாறின்றேல் அது பிறழ்பிரயோகம் ஆகும். அதாவது நேர்மையுடன், இயைபான கருத்துரைகளை உள்வாங்கி இயைபற்ற கருத்துரைகளை உள்வாங்காது நோக்கத்தை அடையும் வண்ணம் புரியப்பட வேண்டும். மன்னன் போரில் ஈடுபடும் நோக்கிலேயே குதிரைகளை வாங்க அனுப்பியிருந்தான். அவை வலுவுள்ள, திறனுள்ள குதிரைகளாக இருக்குமாறு அமையவே அதிகாரமளிக்கப்பட்டது. ஆனால், குதிரைகள் வந்தன. அதாவது செயல் புரியப்பட்டது. ஆனால், அவை போருக்கான குதிரைகள் அல்ல நரிகளே



பரிகளாயின. மணிவாசகரின் பக்தியைக் கொண்டே அவை அனுப்பப்பட்டன. அதிகாரமளிக்கப்பட்ட நோக்கமும் புரியப்பட்ட செயலின் நோக்கமும் வேறாயின. ஆகவே அச்செயல் வலுவானது அல்ல.

(11ஆம் பக்கம் பார்க்க)

# சீன - பாக். பொருளாதார நடைபாதை வேலைத்திட்டம் மத்திய ஆசியாவுக்கும் இலங்கைக்கும் முக்கியமானது!

## இம்ரான் கான் வலியுறுத்தல்



பௌத்தர்களின் புனித தலங்களை இணைக்கும் 'பௌத்த பாதை' ஒன்றை வடிவமைத்து வருகிறோம். இதன் மூலம் பௌத்த மதத்தை பின்பற்றுகின்ற மக்கள் எமது நாட்டுக்கு வருகை தர முடியும்.

இதற்கான முதல் அழைப்பை நான் இலங்கைப் பிரதமருக்கு விடுக்கிறேன் என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்தார்.

இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

அதன் பின்னர் இணை ஊடக சந்திப்பொன்றை நடத்திய நிலையில் அதில் உரையாற்றும் போதே பிரதமர் இம்ரான்கான் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் -

முதலில் என்னையும் எனது தூதுக்குழுவினரையும் இலங்கைக்கு வரவேற்று உபசரித்தமைக்காக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் இலங்கைக்கு புதியவனல்லன்.

நான் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியவுடனேயே ஒரு கிரிக்கெட் வீரனாக இலங்கைக்கு வந்தேன். நான் எனது கிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பித்திருந்த போது இலங்கையின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்திருந்தார்.

அன்றிலிருந்து இலங்கை தொடர்பான சிறந்த நினைவுகளை நான் கொண்டிருக்கிறேன். டெஸ்ட் அந்தஸ்தற்ற நிலையிலிருந்து உலகக் கிண்ணத்தை வென்றது வரை இலங்கை கிரிக்கெட் அணி வளர்ச்சியடைந்து வந்தமையை நாம் பார்த்திருக்கிறோம்.

உலகக் கிண்ணத்தைக் கூட இலங்கை அணி பாகிஸ்தானில் வைத்தே வென்றது. நானும் எனது கிரிக்கெட் அணியினரும் இலங்கை கிரிக்கெட் அணியின் பரிணாம வளர்ச்சியை கண்டிருக்கிறோம்.

எமது துணைக்கண்டத்தைச் சேர்ந்த நாடு என்ற வகையில் இலங்கை அணி ஓர் உலகத்தரம் வாய்ந்த அணியாக வளர்ச்சியடைந்தமையைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைந்தோம்.

இந்த விஜயம் வரைக்குமான இலங்கையுடனான எனது உறவை நினைவூட்டவே இந்த விடயங்களை இங்கு குறிப்பிடுகிறேன்.

இந்த விஜயம் இரு நாடுகளுக்குமிடையிலான இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும். எமது வியாபார உறவை வலுப்படுத்துவதை இலக்காக கொண்டது.

பாகிஸ்தான் சீனாவின் பட்டுப்பாதை திட்டத்தின் ஓர் அங்கமாக உள்ளது. சீன - பாகிஸ்தான் பொருளாதார நடைபாதை வேலைத்திட்டமும் முதன்மையானதாகும்.

நாடுகளுக்கிடையிலான தொடர்புகள் மிக முக்கியமானவையாகும். எனவேதான் நான் எனது தூதுக்குழுவிடம் இலங்கைக்கு பாகிஸ்தானுக்குமிடையிலான தொடர்புகளை மேலும் முன்னேற்றுவதற்கான வழிவகைகளைக் கண்டறியுமாறு கேட்டிருக்கிறேன்.

சீன - பாகிஸ்தான் பொருளாதார நடைபாதை வேலைத்திட்டம் மத்திய ஆசியாவுக்கும் இலங்கைக்கும் முக்கியமானதாகும்.

எமது வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிவகை குறித்தும் நாம் பேசியிருக்கிறோம். எதிர்காலத்தில் மத்திய ஆசியாவுடனான பாகிஸ்தானின் தொடர்பு மூலம் மேலும் இலங்கை எவ்வாறு பயனடையலாம் என்பது பற்றி நாம் ஆராய்ந்திருக்கிறோம். எமது வர்த்தக உறவுகள் மூலம் இரு நாடுகளும் மேலும் ஒன்றுபட முடியும். நெருக்கமடைய முடியும்.

எமது இரு நாடுகளும் பயங்கரவாதம் எனும் பொதுவான பிரச்சினைக்கு முகங்கொடுத்த நாடுகள். மிக மோசமான பயங்கரவாதத்திற்கு 10 ஆண்டுகளாக பாகிஸ்தான் முகங்கொடுத்தது.

இதனால் 70 ஆயிரம் உயிர்களை நாம் இழந்தோம். அதேபோன்று இலங்கையும் 30 வருட காலம் பயங்கரவாதத்துக்கு எதிராக போராடியது. இலங்கையில் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவருவதில் பாகிஸ்தான் முக்கிய பங்காற்றியதை இந்த இடத்தில் நினைவுபடுத்துகிறேன்.

சுற்றுலாத்துறையின் மீது தங்கியுள்ள இலங்கையின் அபிவிருத்தி இதனால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. பயங்கரவாதம் உள்ள ஒரு நாட்டால் முன்னேற்றமடைய முடியாது. பயங்கரவாதம் உள்ள ஒரு நாட்டில் முதலீடுகளைச் செய்ய முடியாது. பாகிஸ்தானில் பயங்கரவாதம் தலைவிரித்தாடிய 10 ஆண்டுகளில் சுற்றுலாத்துறையே இருக்கவில்லை. எந்தவிதமான முதலீடுகளும் பாகிஸ்தானுக்கு கிடைக்கவில்லை.

இப்போது நாம் இன்னுமொரு பொதுவான பிரச்சினைக்கு முகங்கொடுக்கிறோம். அதுதான் கொரோனா வைரஸ். சுற்றுலாத்துறையில் தங்கியுள்ள இலங்கை போன்ற சகல நாடுகளும் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டதை நாம் அறிவோம்.

இந்த நெருக்கடியான காலத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகள், எவ்வாறு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவலாம் என்பது பற்றி நாம் கலந்துரையாடினோம்.

கொரோனா வைரஸ் நெருக்கடி வறிய நாடுகளையும் அவற்றில் வாழுகின்ற வறிய மக்களையும் கடுமையாகப் பாதித்துள்ளது என்பதை அபிவிருத்தியடைந்த நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும். வறுமையான நாடுகள் எவ்வாறு கடன் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது பற்றியும் நாம் கலந்துரையாடினோம்.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பாகிஸ்தான் தனது வரலாற்றிலேயே 800 கோடி டொலர் பெறுமதியான மிகப் பெரிய நிவாரண உதவித்திட்டத்தை அமுல்படுத்தியது.

இதனை நீங்கள் அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது அங்கு 3 லட்சம் கோடி டொலர் நிவாரணமாக வழங்கப்பட்டது. அமெரிக்காவின் சனத்தொகை 33 கோடி. பாகிஸ்தானின் சனத்தொகை 22 கோடி. இது அமெரிக்க சனத்தொகையில் 70 வீதம். இதுதான் மிகப் பெரிய முரண்பாடு.

கொரோனா வைரஸ் உலகில் நிலவும் இந்த சமத்துவமின்மையை நன்கு வெளிக்காட்டியுள்ளது. அதனால்தான் ஐக்கிய நாடுகள் சபை போன்ற உலக நிறுவனங்கள் கொரோனா வைரஸால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இவ்வாறான நாடுகள் தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும் என நான் கோரிக்கை விடுக்கிறேன்.

இறுதியாக, நான் இலங்கைப் பிரதமரை பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்புவிடுக்கிறேன். உலகிலேயே மிகப் பாரிய பௌத்த புராதன சின்னங்களை பாகிஸ்தான் கொண்டுள்ளது.

40 அடி நீளமான 'உறங்கும் புத்தர்' எனும் உலகிலேயே மிகப் பாரிய பௌத்த புராதன சின்னத்தை நாம் அண்மையில் கண்டுபிடித்துள்ளோம். வடக்கு பாகிஸ்தான், கந்தாரா நாகரீகத்தின் மிக முக்கிய தளமாகும்.

இவற்றைப் பார்வையிட பாகிஸ்தானுக்கு வருகை தருமாறு இலங்கை மக்களை நான் அழைக்கிறேன். நாம் இப்போது பௌத்தர்களின் புனித தலங்களை இணைக்கும் 'பௌத்த பாதை' ஒன்றை வடிவமைத்து வருகிறோம். இதன் மூலம் பௌத்த மதத்தை பின்பற்றுகின்ற மக்கள் எமது நாட்டுக்கு வருகை தர முடியும். இதற்கான முதல் அழைப்பை நான் இலங்கைப் பிரதமருக்கு விடுக்கிறேன். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

# புதிய தொற்றாளர்கள் எண்ணிக்கை வீழ்ச்சி!

## சுதர்ஷினி பெருமிதம்

புதிதாக அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கொரோனா ஒழிப்பு இராஜாங்க அமைச்சர் விசேட நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 3, 4 நாள்களாக நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதை அவதானிக்க முடிந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரி இறுதி மற்றும் பெப்ரவரி மாதங்களின் முதல் வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 6.5 வீதமானோருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டபோதும் தற்போது அந்த எண்ணிக்கை 4 அல்லது 4.5 வீதமாக குறைவடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த நாள்களில் கொழும்பு மாவட்டம் மற்றும் கொழும்பு நகரில் பெருமளவான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர், எனினும் தற்போது அந்த நிலைமையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது மக்கள் பொறுப்புடன் செயற்படுகின்றமையால், நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வாகன இறக்குமதிக்கான தடை ஆண்டு இறுதிவரை நீடிப்பு!

## அரசாங்கம் தெரிவிப்பு

வாகன இறக்குமதியை நிறுத்தி வைக்கும் முடிவு இந்த ஆண்டின் இறுதி வரை நடைமுறையில் இருக்கும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உரையாற்றிய நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

ரூபாவுக்கான பெறுமதியின் அதிகரிப்பை கட்டுப்படுத்த அரசாங்கம் மோசமான பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் தன்னிச்சையாக இந்த முடிவை எடுத்ததா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப்பினார்.

அத்தோடு அரசாங்கத்தின் மோசமான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக வர்த்தகத்தில் ஈடுபடும் விற்பனையாளர்கள் உட்பட பலர் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

இதற்கு பதிலளித்த நிதி இராஜாங்க அமைச்சர், வாகன இறக்குமதிக்கு 2021 இறுதி வரை தடை தொடரும் என்றும் ஆண்டின் இறுதியில் இந்த நிலைமை தொடர்பாக மதிப்பாய்வு செய்யப்படும் என்றும் கூறினார்.

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் நடவடிக்கையாக, வாகனங்களை இறக்குமதி செய்வதைத் தற்காலிகமாக நிறுத்திவைக்க அரசாங்கம் கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## குழி முறை

* உலர் வலயத்தில் மழை குறைந்த நாள்களில் இதனைப் பயன்படுத்தலாம்.
* கூட்டெருவின் தேவையைப் பொறுத்தும் கிடைக்கும் மூலப்பொருள்களின் அளவிற்கேற்பவும், குழியின் நீள அகலம் அமையலாம் ஆனால் அவற்றை இலகுவாக கலப்பதற்கும் நடைமுறை பிரச்சினைகளை தவிர்ப்பதற்கும் குழியின் ஆழம் ஒரு மீற்றரை விட அதிகமாக இருக்கக் கூடாது.
* குழியின் அடியில் 2 - 4 அங்குல உயரத்திற்கு மரத்தூள் அல்லது உமியை படையாக இடுக.
* இதன் மேலாக ஆரம்ப கலவை அல்லது கூட்டெருவை சிறு படையாக இடுக. இது நுண்ணங்கிகளின் எண்ணிக்கையையும் அதன் வளர்ச்சியையும் அதிகரிக்கும்.

  ஆரம்ப கலவை தயாரிப்பதற்கு உக்கிய மாட்டெரு (முன்னர் தயாரிக்கப்பட்டது) மரச்சாம்பல், சாணம் என்பவற்றை 3 : 1 : 1 என்ற விகிதத்தில் கலந்து ஆரம்ப கலவையை தயாரிக்கலாம் ஆரம்ப கலவை இல்லாமலே கூட்டெருவை தயாரிக்க முடியும். இதனை இடுவதனால் கூட்டெருவாதல் விரைவாக நிகழும்.
* புரட்டுவதற்கு வசதியாக சிறிதளவு இடம் விட்டு படை படையாக ஏனைய பகுதியை நிரப்பும் போது ஆரம்ப கலவையை ஒவ்வொரு படையின் மீதும் விசிற முடியுமாயின் மிகவும் நல்லது.
* பொருள்கள் சிதைவடைய உதவும் நுண்ணுயிர்களுக்கு வாயு, நீர், வெப்பநிலை என்பன அவசியமாகும் எனவே குழிகளில் பரவப்படும் ஒவ்வொரு படையிலும் ஈரப்பதன் இருப்பது அவசியமாகும்.
* குழியை நிரப்பிய பின் அதனை மூடி விடுவதன் மூலம் வெப்பத்தை பாதுகாக்க முடியும்.
* மழை நீரில் இருந்து குழியைப் பாதுகாக்க தடுப்புகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர்
Kalaikkathir

# இலங்கைக்கு எதிரான பிரேரணை வலுமிக்கதாக இருக்க வேண்டும்!



## பலாலியில் அமெரிக்கத் தூதுவருடனான சந்திப்பில் சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து

(ந.லோகதயாளன்)

**ஜெனிவாவில் இலங்கை தொடர்பான புதிய பிரேரணைக்குப் பின்னால் இருந்து அமெரிக்கா செயற்படும்.**

**– இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி டெப்லிட்ஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனிடம் புதன் தெரிவித்தார்.**





யாழ்ப்பாணத்தில் இரண்டு நாள்களாகத் தங்கியிருந்த அமெரிக்கத் தூதுவரைக் கொழும்புக்கு அழைத்துச் செல்வதற்காகப் பலாலியில் வந்திறங்கிய விமானத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் வந்திறங்கினார். அவ்வேளை அமெரிக்கத் தூதுவர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பயணிக்க விமான நிலையத்துக்கு வந்திருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் அரை மணி நேரம் விமான நிலையத்தில் இருவரும் சந்தித்து உரையாடினர். இதன்போதே அமெரிக்க தூதுவர் மேற்கண்டவாறு கூறினார். குறித்த சந்திப்பின்போது மேலும் பல விடயங்கள் உரையாடப்பட்டன.

இம்முறையும் இலங்கை தொடர்பான ஒரு பிரேரணை வருவது மிகவும் இன்றியமையாதது .இருப்பினும் அதன் உள்ளடக்கம் தொடர்பான சர்ச்சைகளுக்கு அப்பால் பிரேரணை கண்டிப்பாக வலுமிக்கதாக வரவேண்டும் என்று அமெரிக்கத் தூதுவருடனான சந்திப்பில் சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார் என அறிய முடிந்தது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் செயலாளர்

## லீலாதேவியிடமும் ரி.ஐ.டி. விசாரணை



(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு, கிழக்குவலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்த நடராஜாவிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் இன்று விசாரணைமேற்கொண்டனர்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் அலுவலகத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது என அவர் கூறினார்.

இதன்போது வங்கிக் கணக்குகள், வங்கிக்குப் பணம் பரிமாறப்படுவது உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணை செய்தனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2010ஆம் ஆண்டு ஜெனிவா சென்றமை, அங்கு பேசப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் என்னிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இந்த விசாரணையின் போது, எமக்கு நீதி கிடைக்கவில்லை, இலங்கை அரசிடம் அழுத்தம் கொடுத்தாவது எமது பிள்ளைகளை மீட்டுத் தாருங்கள் என்று ஜெனிவா சென்றிருந்த போது கோரிக்கை முன்வைத்திருந்தேன். அத்தோடு, மேலும் பல விடயங்களை அவர்கள் என்னிடம் வினாவினர்- என்றார்.

## இலங்கையின் பொறுப்புக் கூறலை ஐ.நா. சபை உறுதிசெய்ய வேண்டும்

### அமெரிக்கா கோரிக்கை

ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள பிரேரணைக்கு ஒத்துழைப்பு வழங்க ஐ.நா. மனித உரிமைகள் சபையை ஊக்குவிப்பதாக அமெரிக்காவின் வெளியுறவுத் துறை இராஜாங்கச் செயலாளர் டோனி பிளின்கென் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடர் நடந்துவரும் நிலையில் அதில் உரையாற்றும்போதே அமெரிக்காவின் வெளியுறவுத்துறை இராஜாங்கச் செயலாளர் டோனி பிளின்கென் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையில் கடந்த கால துன்புறுத்தல்கள் மீதான பொறுப்புக் கூறலின்மை உள்ளிட்ட விடயங்களை முன்னிறுத்தி இந்தப் பிரேரணைக்கு ஆதரவு வழங்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு அமெரிக்கா மீண்டும் ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் இணைந்துகொள்ளத் தீர்மானித்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



## அவசர கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்தும் கோட்டா



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விசேட அரசியல் கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஶ்ரீலங்காபொதுஜனமுன்னணி மற்றும் ஆளுங் கட்சியில் உள்ள பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வியாழன் மாலை 6.30 மணிக்கு, ஜனாதிபதி செயலகத்தில் மேற்படி சந்திப்பு நடைபெறவுள்ளது.

## மீன்பிடித் துறைமுகம் வேண்டாம் பேசாலை மீனவர்கள் திட்டவட்டம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.24

பேசாலையில் அமைக்க திட்டமிடப்படும் மீன்பிடித் துறைமுகத்தின் பின்னால் உள்ள அரசியல் தொடர்பில் எம்மால் பகிரங்கமாக வாய் திறந்து பேசமுடியவில்லை. அதனால் அந்தத் துறைமுகம் எமக்கு வேண்டாம் என்பதனை உறுதியாக கூறுகின்றோம் என அப்பகுதி மக்கள் ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகளிடம் நேரில் தெரிவித்தனர்.

வடக்கிற்கு இரு நாள் பயணமாக வந்துள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள், கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் குழுவினர்

நேற்று மன்னாரிக்கு பயணித்து பேசா லையில் இரு நூறு கோடி ரூபா செலவில் அமைக்கத்திட்டமிடப்பட்ட துறைமுகம் தொடர்பில் கலந்துரையாடினர். இதன் போதே மேற்கண்டவாறு அப்பகுதி மீனவ பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டது. அவர்கள் அங்கே மேலும் விவரம் தெரிவிக்கையில் -

மன்னார் பேசாலையில் துறைமு கத்தை நாமும் கோரினோம். ஆனால் தற்போது இதன் மூலம் கிடைக்கும் நன்மையைவிட எமக்கு ஏற்படும் ஆபத்துக்கள் அதிகம் என்பதனை தற்போதே உணர்கின்றோம். எனவே எமது பிரதேசத்தில் இந்த திட்டம் வேண்டாம். - என்றனர்.

இதனை ஏற்ற ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் உங்கள் விருப்பம் இன்றி துறைமுகம் திணிக்கப்பட மாட்டாது எனத் தெரிவித்தனர்.

## இலங்கை ஜனாஸா விவகாரம் தொடர்பாக இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியம் கவலை

இலங்கை முஸ்லிம்களின் இறுதி உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதையிட்டு இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியம் கவலை வெளியிட்டுள்ளது.

இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியத்தின் செயலாளர் யூசுப் அல் உதைமீன் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46 ஆவது அமர்வில் உரையாற்றும்போதே, இதனைத் தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளுக்கு மாற்றமாக, கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்கள் எரிக்கப்படுகின்றன எனவும் அவர் கூறியுள்ளார்.

முஸ்லிம்களின் ஜனாஸா நல்லடக்க உரிமையை இலங்கை அரசு உறுதிப்படுத்த வேண்டும் எனவும் இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. தீர்மானங்களுக்கு அமைய அனைத்து சமூகங்களினதும் மத உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும்யூசுப்அல்உதைமீன்கேட்டுக்கொண்டுள்ளார்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் செயற்பாடுகளுக்கு இஸ்லாமிய நாடுகளின் ஆதரவையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.



# முல்லையில் அரச காடுகளை அபிவிருத்திக்கு பயன்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல்!

## 1,146 ஏக்கர் காட்டை விடுவிக்க இணக்கம்

**ந.லோகதயாளன்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச காடுகளை அபிவிருத்திக்காக பயன்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல்களில் இதுவரை ஆயிரத்து 1,146 ஏக்கர் காணி விடுவிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

வனஜீவராசிகள் , வனவள பரிபாலன அமைச்சின் சுற்று நிருபத்திற்கேற்ப ஒதுக்கப்பட்ட காடுகள் தவிர்ந்த ஏனைய அரச காடுகளை அபிவிருத்திக்காகப் பயன்படுத்தும் நோக்கில் பிரதேச செயலாளர்களிடம் கையளிப்பது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பான கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை மு.ப 9.30மணிக்கு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

சுற்றாடல், வன ஜீவராசிகள் வளங்கள் மற்றும் காடுகள் என்பவற்றிற்கு பங்கம் ஏற்படாத வகையில் பொருளாதார மற்றும் ஏனைய உற்பத்தி சாஜுந்த நடவடிக்கைகளுக்காக ஏனைய அரச காடுகளைப் பயன்படுத்துவதற்கு மாவட்ட செயலாளர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும் முடியுமான வரை செயலாற்றுவதற்கு அனுமதியளிக்கும் குறித்த சுற்றறிக்கையின்படி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து அதன் முன்னேற்றங்கள் மற்றும் மேலும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் முகமாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்களுக்கு கையளிக்கப்படக் கூடிய காணிகள் தொடர்பில் பிரதேச செயலாளர்கள், வனஜீவராசிகள், வன வள, நில அளவை, நீர்ப்பாசன திணைக்கள மற்றும் காணிப் பயன்பாட்டு திட்டமிடல் பிரிவு சார்ந்த அதிகாரிகள் இணைந்த குழுவின் கள விஜயம் ஊடாக விடுவிக்கப்படக் கூடிய காணிகளை ஆராய்ந்து பிரதேச காணிப்பயன்பாட்டுக் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்து பொருத்தமான தொடர் நடவடிக்கையினை முன்னெடுத்துச் செல்வதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அடையாளம் காணப்பட்ட இடங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

மேலும் காணி தொடர்பான சிறுபிரச்சினைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து உடனடியாக தீர்த்து வைக்கும்படி பிரதேச செயலாளர்களிடம் மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், மாகாண காணி ஆணையாளர், பிரதேச செயலாளர்கள், வன ஜீவராசிகள் திணைக்கள உதவிப்பணிப்பாளர், மாவட்ட செயலக காணிப் பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப்பாளர், மாவட்ட உதவி வன வள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக காணிப்பிரிவு உத்தியோகத்தர்கள் எனப் பல்வேறு தரப்பட்டோர் கலந்து கொண்டனர்.

வனவளத் திணைக்களத்தால் இதுவரை 1,146 ஏக்கர் நிலத்தை விடுவிக்க இணக்கம் காணப்பட்டுள்ளதோடு ஏனையவை தொடர்பில் ஆராயப்படுகின்றது.

## யாழ். பல்கலை பட்டமளிப்பு:

# சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த விருதுபெற்றார் மாணவி துலாபரணி!



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பட்டமளிப்பு விழாவில் அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம் இவ்வாண்டு செல்வி முனியப்பன் துலாபரணிக்கு வழங்கப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பட்டமளிப்பு விழா நேற்று புதன்கிழமை மற்றும் இன்று வியாழக்கிழமை நடைபெறுகின்றது.

இந்நிலையில், நேற்று நடைபெற்ற அமர்வின் போது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையில் ஊடகவியலில் திறமைச் சித்திபெற்ற மாணவியான மாத்தளை மாவட்டத்தின் சுதுகங்கை எனும் ஊரைச் சேர்ந்த செல்வி முனியப்பன் துலாபரணிக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடக மாணவனாகப் படித்துக் கொண்டு ஊடகவியலாளராகப் பணியாற்றிய நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஆவணி முதலாம் திகதி அதிகாலை ஐந்து மணியளவில் அவரது வீட்டில் வைத்து பெற்றோர் முன்னிலையில் ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், நிலக்சனது ஞாபகார்த்தமாக அவருடன் யாழ். இந்துக்கல்லூரியில் ஒன்றாகக் கற்ற 2004 உயர்தர மாணவர்களால் முன்னெடுக்கப்படும் நிலா நிதியமானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவின் போது ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சிபெறும் மாணவருக்கு ஆண்டு தோறும் வழங்கப்படும் தங்கப்பதக்கத்தை அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்தமாக வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

இந்த நிதியத்தின் அங்குரார்ப்பண சான்றிதழ் 2017ஆம் ஆண்டு நடைபெற்ற நிலக்சனின் 10ஆம் ஆண்டு நினைவேந்தலின் போது யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதியிடம் கையளிக்கப்பட்டு பின்னர், யாழ். பல்கலைக்கழகத்திடம் நிதி கையளிக்கப்பட்டது.

இதன்மூலம், அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம் கடந்த இரண்டு ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகின்றது. இந்த விருதை கடந்த ஆண்டு யாழ்ப்பாணம் உடுவிலைச்சேர்ந்த மாணவியான செல்வி அன்ட்கேசிகா லோறன்ஸ் ராஜ்குமாரும், முன்னைய ஆண்டு யாழ்ப்பாணம் கோண்டாவில் குமரகோட்டத்தைச் சேர்ந்த யாழ் பல்கலை மாணவியான தினேஸ் விஜயதர்சினியும் பெற்றுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணம் சிறைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மாதிரிகள் பெறப்பட்ட – யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள – 4 கைதிகள் இதில் அடங்குகின்றனர். நேற்றுமுன்தினம் கைதி ஒருவர் அடையாளம் காணப்பட்ட நிலையில் மேலும் 4 பேர் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் சிற்றூழியர்.

மேலும் மல்லாவியில் புத்தளத்திலிருந்து வருகை தந்த பெண் உள்பட இருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை ஏற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மல்லாவியில் இடம்பெற்ற இறுதிச் சடங்கு ஒன்றுக்கு புத்தளத்திலிருந்து வருகை தந்தோர் பங்கேற்றிருந்தனர். அந்த இறுதிச் சடங்கில் பங்கேற்ற ஒருவருக்கு கடந்த சில தினங்களுக்கு முன் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது. மேலும் இருவருக்கு தொற்று உள்ளமை இன்று கண்டறியப்பட்டுள்ளது – என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## இம்ரான் கானுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தங்கியிருந்த ஷங்கரில்லா ஹோட்டலில் நடந்த நேற்றைய பேச்சின் போது, இலங்கை முஸ்லிம்களின் விவகாரம், ஜனாஸா எரிப்பு விடயம் என்பன முக்கிய இடத்தை பிடித்திருந்தன. ஜனாஸா விவகாரம் குறித்துத் தாம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசினார் என்றும் அவர்களிடமிருந்து சாதக பதில் கிடைத்துள்ளது என்றும் இம்ரான் கான் குறிப்பிட்டாராம்..

எனினும் இவ்விவகாரங்களை விலாவாரியாக, நாம் ஊடகங்களில் பகிரங்கப்படுத்த தேவையில்லை என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு முஸ்லிம் அரசியல்வாதிகளும் முழு இணக்கம் வெளியிட்டுள்ளனர். இச்சந்திப்பில் நீதி அமைச்சர் அலி சப்ரியும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

## ஒரே நாளில் பன்னிருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேச்சாளரும், பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது குறித்து அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

இலங்கையில் செவ்வாய்க்கிழமை( 23 ஆம் திகதி) ஏற்பட்ட வீதி விபத்துக்கள் காரணமாக 12 பேர் உயிரிழந்துள்ளனர். 11 வீதி விபத்து சம்பவங்களில் சிக்கியே இவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவங்களில் 08 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள், 02 பாதசாரிகள் மற்றும் 02 வாகன பயணிகளும் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாடசாலை விடுமுறை இன்று ஆரம்பம்!

*2021ஆம் ஆண்டுக்கான அரச மற்றும் அரச அனுமதி பெற்ற பாடசாலைகளின் முதலாம் தவணை கல்விச் செயற்பாடுகள் இன்று (வியாழக்கிழமை) நிறைவடைகின்றன.*

*கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதற்கமைய இரண்டாம் தவணை கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

## செய்வன திருந்தச்...

**(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

ஆக, ஒரு நாடு தன் நாட்டு மக்களின் குறித்த தேவையை நிறைவு செய்யப் பொருள்களை இறக்குமதி செய்ய அதிகாரம் வழங்கியிருப்பின் நேர்மையீனமாக, நோக்கத்திற்குப் பொருந்தாத பொருள்களை இறக்குமதி செய்யின் அப்பொருளுக்கும் மக்களின் பணத்தை செலுத்த முடியாது.

செயலைப் புரிவதில் பிரயோகிக்கப்பட்ட தற்துணிவு எனும்போது மன்னனால் குதிரைகள் வாங்க அனுப்பப்பட்ட மணிவாசகர் அக்குதிரைகளை எந்த இடத்தில் வாங்குவது அவற்றை யாரிடம் வாங்குவது, யாரிடம் கோருவது என்பன தொடர்பாக மணிவாசகரே முடிவெடுக்க தற்துணிவதிகாரம் கொண்டவர். அந்நோக்கில் அவர் குருந்தமர நிழலில் தனை ஆட்கொண்டவரிடம் கோருவதிலோ, உதவியைப் பெறுவதிலோ தவறில்லை. தன்னை ஆட்கொண்ட பெருமானிடம் கொடை முனைவைச் செய்திருக்கிறார். அதைப் பெருமானும் ஏற்று ஆவணி மூல நாளில் குதிரைகள் வரும் என ஓலை அனுப்புமாறு கூறியிருக்கிறார். அவ்வாறே மணிவாசகரும் செய்தார். ஆக, ஒப்பந்தக் கடப்பாட்டை உரிய முறையில் நிறைவேற்றாதது சொக்கநாதப் பெருமானே. அவரின் சித்தம் வேறொன்றாக அமைந்தது.

மேலும், மேற்கொள்ளப்பட்ட செயலின் நடவடிக்கை முறை எனும்போது இங்கு, கால வரம்புகளைக் குறிப்பிட முடியும். எதிர்பார்க்கப்பட்ட காலத்தில் குதிரைகள் வராதபடியால் எப்போது வரும் எனக்கேட்டு மன்னன் ஓலை அனுப்பினான். உரிய காலத்தில் கிடைக்காத குதிரைகளால் மன்னனின் திட்டம் நிறைவேறாது போகலாம். அதன் பின்னரும் குதிரைகளால் அச்செயலால் பயன் விளையாது. ஆகவே அக்கால வரம்பை ஆணையாகக் கருதிச் செயற்பட வேண்டும். மன்னனால் இடப்பட்ட காலவரம்பு ஆணையா? அல்லது பணிப்பா? என அவதானிக்க வேண்டும். ஆணை என்பது மீறப்பட முடியாதது. மீறப்படும் செயல் வலுவற்றது.

உயர் நீதிமன்றுக்கு செய்யப்படும் அடிப்படை உரிமை மீறல் தொடர்பான வழக்குகள் 2 மாதத்துக்குள் தீர்ப்பிடப்பட வேண்டும் என அரசியலமைப்பு உறுப்புரை 126(5) குறிப்பிடுகின்றது. அதாவது, எந்த ஒரு குடிமகனும் அடிப்படை உரிமை விடயத்தில் தாமதமான நீதியைப் பெறக்கூடாது என்பதில் 2 மாதம் என்பது ஆணையாகக் கருதப்படும். ஆனால் 2 மாதத்தில் தீர்ப்பிடப்படாத வழக்கை மேற்கொண்டு விசாரித்து தீர்ப்பு வழங்க உயர் நீதிமன்றுக்கு நியாயாதிக்கம் இல்லை என ஒருவர் வாதிடுவாராயின் அவ்வாதப்படி வழக்கு கைவிடப்படுமாயின் பாதிக்கப்பட்ட நபர் நீதியை என்றுமே பெறமுடியாது.

ஆகவே அச் சூழ்நிலையில் அந்த இரண்டு மாத அவகாசம் பணிப்பாகக் கருதப்பட்டு இரண்டு மாதத்துக்குள் தீர்ப்பிடாத படியால் நீதிமன்றம் நியாயாதிக்கத்தை இழக்கவில்லை எனக்கொண்டு வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்ப்பிடப்படும். ஆக, ஆணையா, பணிப்பா என்பது சூழ்நிலையைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படும்.

ஒருவேளை ஆவணி மூல நாளிற்குள் மன்னன் போரை ஆரம்பிக்க வேண்டியிருப்பின் அதற்கு முன்னரான காலத்தில் குதிரைகள் வரவேண்டி இருப்பது ஆணையாகும். எது எப்படி இருப்பினும் சொக்கநாதப் பெருமான் தன் பக்தன் மணிவாசகரை ஆட்கொண்டு சொல்ல வந்த செய்தி எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வகை செய்யும் மக்கட் பணியே அனைத்திலும் மேலானது. அவ்வாறு மக்கள் நலனுக்காக, பொது நலனுக்காகப் பணியாற்றும் எவரையும் எவரின் கோரிக்கையையும் இறைவன் செவி சாய்க்காது விட்டதில்லை. அதற்காகவே தன்னைத்தேடி வந்திருந்த மணிவாசகருக்கு மட்டமல்ல வருந்தியழைத்த வந்திக்காகவும் பிட்டுக்கு மண்சுமந்தார்.

# யாழ். பல்கலையில் பட்டமளிப்பு நேற்று ஆரம்பம்....









# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை அறிக்கையை ஜனாதிபதி இரத்து செய்ய வேண்டும் – சிங்கள ராவய

உயிர்த்த ஞாயிறுதினத்தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையில், தேசிய ரீதியான அமைப்புக்கள் மற்றும் இயக்கங்களின் உருவாக்கமே சஹ்ரான் போன்றவர்களின் செயற்பாடுகளுக்குத் தூண்டுதலாக அமைந்ததாகக் கூறப்பட்டிருப்பதாக அறியமுடிகின்றது.

இந்த அறிக்கை எம்மீது குற்றம் சுமத்துவது போன்றே தோன்றுகிறது. ஜனாதிபதி இந்த நியாயமற்ற அறிக்கையை இரத்துச் செய்துவிட்டு, வெற்றிகரமாகச் செயற்படக் கூடிய குழுவொன்றின் ஊடாக ஆராய்ந்து விசாரணை அறிக்கையை வெளியிட வேண்டும் என்று சிங்கள ராவய அமைப்பின் தலைவர் ஹக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அங்கு அவர் மேலும் கூறியதாவது –

உயிர்த்த ஞாயிறுதினத்தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையில், தாக்குதலுடன் தொடர்புபட்டவர்களைத்தண்டிப்பதற்கானபரிந்துரைகள் முன்வைக்கப்படும் என்று எதிர்பார்த்தோம்.

எனினும் தேசிய ரீதியான அமைப்புக்கள் மற்றும் இயக்கங்களின் உருவாக்கமே சஹ்ரான் போன்றவர்களின் செயற்பாடுக ளுக்குத் தூண்டுதலாக அமைந்தன என அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாக அறியமுடிகின்றது.

கடந்த காலத்தில் மாவனல்லையில் புத்தர் சிலை உடைக்கப்பட்ட போதும் வனாத்தவில்லு பகுதியில் ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்ட போதும் நாம் பலமுறை எச்சரித்திருந்தோம்.

எனினும் அதனுடன் தொடர்புபட்டிருப்பதாகக் கைது செய்யப்பட்டவர்களை விடு விக்குமாறு அஸாத் சாலியால் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாக அப்போதைய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்திருந்தார். அந்தச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்களே உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல்களில் ஈடுபட்டிருந்தனர்.

எனவே அறிக்கையின் பிரகாரம் அஸாத் சாலி போன்றவர்கள் குற்றவாளிகளாக அறிவிக்கப்படுவார்கள் என்று கருதினோம். எனினும் அத்தகைய உள்ளடக்கங்கள் இருப்ப தாக அறியமுடியவில்லை.

எமக்குக் கிடைத்த தகவல்களின்படி மேற்படி விசாரணை அறிக்கையில் உள்ளடக்கங்கள் எமக்குப் பெரிதும் அதிருப்தியளிப்பவையாகவே உள்ளன.

அடிப்படைவாதக்குழுவினர் இணைந்தா இந்த அறிக்கையைத் தயாரித்தார்கள் என்ற கேள்வியும் தற்போது எழுகின்றது. ஏனெனில் இதில் எம்மைக் குற்றவாளிகளாக சித்திரிக்கும் போக்கு காணப்படுவதாகவே தெரிகின்றது.

நாம் சஹ்ரான் போன்றவர்களின் செயற்பாடுகளை ஆராய்வதற்கும் எதிர்ப்பதற்குமே தேசிய ரீதியில் அமைப்புக்களை நிறுவினோம். எனவே ஜனாதிபதி இந்த நியாயமற்ற அறிக்கையை இரத்துச்செய்துவிட்டு, வெற்றிகரமாக செயற்படக்கூடிய குழுவொன்றின் ஊடாக ஆராய்ந்து விசாரணை அறிக்கையை வெளியிட வேண்டும். – என்றார்



## கடமைக்குத் திரும்பினார் சுகாதார அமைச்சர் பவித்ரா!

கொரோனா தொற்றிலிருந்து குணம டைந்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னி யாரச்சி நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) தனது சேவையின் நிமித்தம் அமைச்சுக்கு சமுகமளித்துள்ளார்.

இதன்போது சுகாதார அமைச்சர் மற்றும் அமைச்சின் அதிகாரிகளுக்கிடையில் கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இதேவேளை, தற்போது மேற்கொள்ளப் பட்டுவரும் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்

கைகள் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் தொடர்பாகவும் அவர் கவனம் செலுத்தியதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## கொரோனாவிலிருந்து 672 பேர் குணமடைவு!

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து மேலும் 672 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதனை அடுத்து நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 76 ஆயிரத்து 514 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 80 ஆயிரத்து 739 ஆக காணப்படுகின்றது.

இதில் 4 ஆயிரத்து 42 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை இலங்கையில் கொரோனா தொற்றினால் இதுவரை 453பேர்உயிரிழந்துள்ளமைகுறிப்பிடத்தக்கது.

A/L 2021, 2022
புவியியல் A+
DCM - யாழ்நகர்
முழுநிலாக் கருத்தரங்கு : 01
"தேசப்படங்கள்"
காலம் :- 26.02.2021
நேரம் :- 10 - 02 pm
ஆசிரியர்:- P.S.V. தினேஸ் B.A (Hons) Geo.Spl
Dip in GIS & RS, M.phil in Geography
* Multimedia ஊடான கருத்தரங்கு
* வெளிமாணவர்கள் அனைவரும் இணைந்து கொள்ளலாம்.
* கையேடுகளிற்கான கட்டணம் மட்டும் அறவிடப்படும்.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை
மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1985.04.28
மதம் - இந்து V
நட்சத்திரம் - திருவாதிரை
செவ் - ----
பாவம் - 41 1/4
கல்வி - A/L
தொழில் - சுய தொழில் (தோட்டம்)
எதிர்பார்ப்பு - சாதாரண பெண்.
மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1984.06.22
மதம் - இந்து V
நட்சத்திரம் - உத்திரட்டாதி
செவ் - ------
பாவம் - 40
கல்வி - A/L
தொழில் - --
எதிர்பார்ப்பு - வெளிநாடு தேவை.
யாழ் காலைக்கதிரில் காலை, மாலைப் பதிப்பிலும் முகநூலின் ஊடாகவும் மணமக்கள் விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.
அலுவலக நேரம் - எல்லா நாள்களும் காலை 8.30 தொடக்கம் 5.30 வரை.
பதிவுக் கட்டணம் 1000 + 300
Facebook - Kalyanamalaivada.com
குஞ்சர் கடையடி, பருத்தித்துறை பிரதான வீதி, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
076 885 6925
077 857 8528

Anna EXPRESS Courier Services
அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி
சங்கத்தானை பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு
கனகராயன்குளம் மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.02.2021 இல் வெளியிடப்பெற்றது.